ரிஜிஸ்டர் நெ. 2041.

தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கீரஸ-ஆடு மாசி-மீ 29-உ (12—3—1933) | மலர் 46.

## குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

### மதமும், லெனினும்.

விலை அணா 0—4—0

### கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப் பட்டது. இதன் விலை அணா. 0—8—0.

### இராமாயண ஆராய்ச்சி.

முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

### ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

### ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதன் விலை அணா. 0—2—0.

### தர்மபரீட்சை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

### பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இதன் விலை அணா 0—4—0

### மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இதன் விலை அணா 0—3—0

### அகத்தியர் ஆராய்ச்சி.

இதன் விலை அணா 0—2—0

### ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.

விலை அணா 0—1—0.

### கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதன் விலை அணா 0—2—0

### கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பி காலத்தையும், செல்வத்தையும், அதற்காகச் செலவு செய்து சோம்பேறிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

### சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

### இராமசாமியின் இலங்கை உபந்யாசம்.

விலை பை. 0—0—6

### இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்ச்பை எழுதியது விலை அணா 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

### இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

### சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

### கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# இந்தியாவின் குறைபாடுகள்.

## The Crux of the Indian Problem

### என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.



[illegible] இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சீர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதிடமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும்நிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவதவசியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை அணா ... ... ... 0—8—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

---

## ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24 பக்கம் கொண்டது. விலை- 0-0-6 100-புத்தகம் ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினால் 100-புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

## இந்தியாவின் குறைபாடு.

160 பக்கம் 0—8—0. 100 புத்தகம் 25—0—0. தபால் செலவு வேறு

முன் பணம் வராத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது. தபால் செலவு சேர்த்தனுப்பாத ஆர்டர்களுக்கு தபால் செலவுக்காக வி. பி. எடுத்துக் கொள்ளப்படும்.

## மதமும் லெனினும்.

100 பக்கம் விலை அணா 0—4—0. 100 புத்தகம் 12-8-0 தபால் செலவு வேறு.

---

## ஜார்ஜ் பெர்னாட்ஷாவின்,

அமெரிக்க சொற்பொழிவும், பத்திரிகைபிரதிநிதிகளுக்கு அளித்த சேதிகளும்.

விலை அணா 0—1—0. 100 புத்தகம் 3—0—0. தபால் செலவு வேறு.

விலாசம்:— மானேஜர் "குடி அரசு" ஈரோடு.

---

## 'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நைனன்.

வருஷ சந்தா—2—8—0

விலாசம்:—சமத்வபோதினி டிக்கோயா சிலோன்.

---

## குஷ்டம்

வெண்குஷ்டம் பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பாம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

---

## எங்கே கிடைக்கும்?

பல மருந்துகளையும் கையாடி பயனடையாமல் இருப்பவர்கள் தக்க மருந்தையறிந்துகொள்ளும் பொருட்டு இதைப்பிரசுரம் செய்திருக்கிறோம்.

எவ்வித வியாதிக்கும் ஏற்றமருந்து பழனி மலையப்பசாமி வைத்தியசாலையில்தான் கிடைக்கும்.

வியாதிவிபரம் எழுதி ஏற்ற மருந்தை அடையுங்கள்! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S.I.

---

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்"

விலை ரூ. 2. (தபால் சார்ஜ் வேறு)

3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொள்ளலாம். தொழில் முறையில் தேர்ச்சி பெறத்தகுந்த சமயம். எம்மிடம் கிடைக்கும்.

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

# ரஷியா ஒரு புதிய உலகம்.

I.

இன்று உலகத்தில் ருஷிய தேசமானது மற்ற தேசங்களை எல்லாம்விட வேறு மாதிரியான கொள்கையை உடைய ஒரு புதிய உலகமாயிருந்து வருகின்றது. ருஷியாவைப் போய்ப்பார்க்கும் ஒரு அன்னியநாட்டானுக்கு அவனுடைய சொந்த தேசத்தின் கொள்கை மதம், கடவுள், தன்மை, தத்துவஞானம், வாழ்க்கை முறை, நாட்டுப்பழமொழி முதலியவை எல்லாம் அடியோடு வேறுபட்டதாகவே காணப்படும். மற்றும் குடும்ப வாழ்க்கை, இயற்கை அன்பு, இயற்கை மரியாதை, மனிதர் கடமை, பொறுப்பு, உத்திரவாதம், ஒருவர் பிழைப்புக்கு மற்றவரை எதிர் பார்த்து இருப்பது என்பவை எல்லாம் மாறுபட்டும், அடியோடு இல்லாமலும்இருப்பதைக்காணலாம். ரஷியா ஒரு நாஸ்திக நாடு என்று சொல்லிவிட்டால் மாத்திரம் போராது. அது மனித் சமூகத்திற்கு ஒரு பெருத்த விடுதலையை அதாவது அக விடுதலை, புறவிடுதலை என்று சொல்லத்தக்க உண்மையான விடுதலையையும், மனிதவாழ்வு என்பதற்காக சிறிதும் கவலையில்லாத நிலையையும் மனிதனுக்கு "இயற்கையாக" ஏற்படக்கூடிய தனது சமூகத்தினிடமே சுயநலப் பொறுமை, தனக்குள் சதா அதிருப்தி, சுயநல விஷயமாய் பேராசை, போட்டி, சாந்தி அற்ற தன்மை முதலிய குணங்களுக்குஅங்குவேலையேகிடையாது.

நம்நாட்டில்.

முதலாவது நமது நாட்டில் "சம்சாரம் சாகரம் துக்கம்" என்று ஒரு பழமொழியுண்டு. இதை ஒரு வேதாந்த வாக்கியமாகச் சிலர் சொல்லக்கூடும். ஆனாலும் இந்த நாட்டு வாழ்க்கை முறைப்படி அந்தப்பழமொழி உண்மையான காரியமே யாகும். மனிதனுக்கு இந்நாட்டில் இருவித வாழ்க்கைதான் உண்டு. ஒன்று பெண்டு பிள்ளைகளுடன் குடும்பஸ்தனாய் இருப்பது. மற்றொன்று "சம்சாரம் சாகரம் துக்கம்" என்று உணர்ந்தவன் பெண்டுபிள்ளை இல்லாமல் சன்னியாசியாய் இருப்பது. இந்தஇரண்டுக்கும் நடுவில் உள்ளவாழ்க்கை சாதாரணமாகமக்களால் ஏற்றுக்கொள்ள முடியாததும்மதிக்கத்தகாததுமாகத்தான் இருக்க முடியும். எப்படியானாலும் இப்படிப்பட்ட வாழ்க்கை மிகவும் அபூருவமானதாகவே இருக்கும். மற்றும் நம்நாட்டில் வாழ்க்கையில் தாய், தகப்பன், பிள்ளை, அண்ணன், தம்பி, புருஷன், பெண்ஜாதி என்பனபோன்ற சில குடும்ப கட்டுப்பாடுகளும் மரியாதை முறைகளும் பொறுப்புகளும் இருந்துவருகின்றன. இவ்வித கட்டுப்பாடு முதலியவைகள் இயற்கையாய் உடையவை என்றும் ஒருவரை ஒருவர் எதிர்பார்த்தும் நம்பியும் இருக்கவேண்டியது இயற்கைதருமமென்றும், இதற்கு ஆதாரமாய் இயற்கை அன்பு என்பதாக ஒன்று இருக்கின்றது என்றும் சொல்லப்படுவதுடன் அந்தப்படியே மக்களால் நம்பப்பட்டும் வருகின்றன.

அதுமாத்திரமல்லாமல் இவைகளுக்குள்ள பந்தத்துவ முறைகள் என்னும் விஷயமும், சாஸ்திரங்களிலும், தர்மங்களிலும் கட்டுப்பட்டவைகளாகி அவற்றை மீறி நடப்பது மகா பாவமாக (குற்றமாக)வும் கருதப்படுகின்றன.

மற்றும் மனிதனின் வாழ்க்கைப் பயன் பொருள் சேர்ப்பது என்பதும் இது இயற்கை என்றும், அது அவசியமென்றும் அவற்றை கோரவேண்டியது கடமை என்றும் சொல்லப்படுவதோடு ஒவ்வொரு மனிதனின் பிரார்த்தனையிலும், ஆசீர்வாதத்திலும் பொருள் சேரவேண்டுமென்பதே பிரதானமாகி தான் மற்றவனை விட செல்வத்தில் மேன்மையாய் இருக்கவேண்டும் என்ற கவலையே பிரதானமாக இருக்கின்றது. இவையன்னியில் இப்படிப்பட்ட செல்வ நிலைமாத்திரமல்லாமல் வாழ்க்கை நிலையில் பலபடிகளும் அதாவது ஒருவருக்கொருவர் கீழ்பட்டு இருக்கவேண்டும் என்றும் அடங்கி நடக்கவேண்டுமென்றும் ஒருவருடைய ஆதரணையிலேயே மற்றவர் இருக்கவேண்டும் என்றும் பலபடிகளும். நியதிகளும் இருக்கின்றன. இவற்றை சமூகம் பழக்கம், வழக்கம், மதம், சாஸ்திரங்கள், அரசாங்கம் சட்டம் ஆகியவைகள் ஆதரிப்பதுடன் இவை தவறிவிடாமல் காப்பாற்றப்பட்டும் வருகின்றன. அதோடுமாத்திரமல்லாமல் இவைகளின் மூலம் மனிதனுக்கு ஏற்படும் கஷ்டத்திற்கும், நஷ்டதிற்கும் பரிகாரம் செய்ய முடியாது என்று தோன்றிய காலத்தில் ஏற்படுகிற அதிருப்திக்கும்,கடவுள்செயல்என்கின்ற ஒரு சமாதானமும் இருந்து வருகின்றன.

ரஷியாவில்.

ஆனால் ரஷியாவில் இப்படிப்பட்ட காரியங்களுக்கெல்லாம் இடமில்லாத வாழ்க்கைத் திட்டம் இருந்து வருகின்றது.

உதாரணமாக முதலாவது குறிப்பிட்ட விஷயத்தை எடுத்துக்கொள்வோம். அதாவது சம்சாரம் சாகரம் துக்கம் என்பதை எடுத்துக்கொள்ளுவோம். ரஷியாவில் இந்தப்பழமொழிக்கு இடமேயில்லை. அதாவது சம்சாரம் என்பதற்கும் மனித வாழ்க்கைக்கும் சம்பந்தமேயில்லை. எப்படி என்றால் மனிதனுக்கு சம்சாரம் என்பது அவனுடைய குடும்ப நிர்வாகம், சொத்து நிர்வாகம், இவைபற்றிய வரவு செலவு விஷயம் ஆகியவைகளைத்தான் சம்சாரம் என்று சொல்லப்படுகின்றது.

ருஷியாவில் பெண்ஜாதியைக் கட்டிக்கொள்ளலாம். ஆனால் அவளைப் பற்றிய கவலையில்லை. எவ்வளவு பிள்ளைகளை வேண்டுமானாலும் பெறலாம். ஆனால் அவைகளைப் பற்றிய கவலையுமில்லை. ஆகவே பெண்டு பிள்ளைகளின் கவலைகள் நீங்கினாலே அரைவாசி சம்சாரபாரம் இல்லாமல் போய் விடுகின்றது. அதோடுகூட சொத்துக்கவலை நீங்கினால் கால்வாசி சம்சாரபாரம் நீங்கிவிடுகின்றது. ரஷியாவில் ஒருவனுக்கு சொத்தே கிடையாது. ஏதாவது சிறிது மீதப்பட்டாலும் அது சில நாளில் மறுபடியும் செலவு செய்யப்பட்டு விடுமானாலும் அதுவரையிலும் கூட அவற்றின் வரவு செலவு பொறுப்பு இவனுக்கு இல்லாமல் இருக்கின்ற முறையில் அந்த கவலையும் இல்லை.

மற்றபடி ஜீவனத்துக்கு என்ன வழி எப்படி சம்பாதிப்பது என்கின்ற கவலை கவலையும் அங்கு இல்லை. இந்தக்கவலையும் நீங்கினால் மீதிஉள்ள கால் வாசிக்கவலையும்ஒழிந்துவிடுகின்றது.

ஆகவே பெண்டு பிள்ளைகளைப்பற்றிய கவலை, சொத்து வரவு செலவைப்பற்றிய கவலை, சம்பாதனையைப்பற்றிய கவலை என்பவை ஒன்றும் அங்கு தனிப்பட்ட முறையில் யாருக்கும் இல்லை.

ஒரு சமயம் யாராவது செத்துப்போய்விட்டால் துக்கம் ஏற்படாதா? அந்தக்கவலை இருக்குமே என்று சிலர் கேட்கலாம். அந்தக்கவலையும் அங்கு இருக்க இடமில்லை.ஏனெனில் சாவுசம்மந்தமான துக்கம் பெரிதும் குடும்ப சொந்தக்காரர்களுக்கே அதிகமாக இருக்கின்றதைப் பார்க்கின்றோம். அது சொந்தத்தால், ரத்த சம்மந்தத்தால்,அன்பால் நேசத்தால் என்று பலவிதமாக சொல்லிக்கொண்டாலும் ஒருவர் செத்துப்போனதற்கு ஒருவர் துக்கப்படுவது என்பதைபெரிதும்செத்துப்போனவரால் இருக்கின்றவர்களுக்கு ஏற்படும் நன்மை தீமையைப்பொருத்தேதான்இருக்கின்றதேதவிரவேறில்லை. ஒருவரை ஒருவர் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லையானால் புருஷன் செத்து போனால் பெண்ஜாதி துக்கப்படவேண்டியதில்லை. பெண்ஜாதிசெத்துப்போனால் புருஷன்துக்கப்படவேண்டியதில்லை.

அதுபோலவே தகப்பனும், பிள்ளையும், அண்ணனும், தம்பியும் என்றே சொல்லலாம். தனிப்பட்ட முறையில் லாப நஷ்டம் இல்லையானால் செத்துப்போவதால் ஏற்படும் துக்கத்திற்கு மதிப்பே இருக்காது. ஆனால் நேசம், அன்புஎன்று சொல்லப்படுவதும், லாப நஷ்டத்தைப்பொறுத்தில்லையானால் அதற்கும் அதிக மதிப்பு இருக்காது.

பொதுவாக ஜீவசுபாவத்தில் பரிதாபம் இருக்காதா என்று கேட்கலாம். இருக்கக்கூடும் என்றே வைத்துக்கொண்டாலும் அது ஒரு பொதுநலத்தைப்பொறுத்தும் சாதாரணமான அதாவது இயற்கைப்பரிதாபத்தைப் பொருத்ததாகவுமேதான் இருக்குமே அல்லாமல் துக்கப்பட வேண்டியதாய் இருக்காது. ஆதலால் சாவு சம்பந்தமாகவும் அங்கு சுக துக்கம் ஏற்படுவது கவலைக்கிடமானதாக இருக்காது. உதாரணம் வேண்டுமானால் இரண்டொன்று குறிப்பிடுவோம். சுவீகாரமாய் (தத்து) கொடுக்கப்பட்ட சகோதரன் இறந்துவிட்டால் கூடப்பிறந்த சகோதரனுக்குதீட்டுகூடகிடையாது என்று சொல்லப்படுவதாலும் தாசி மூலம் பெற்ற குழந்தை இறந்துவிட்டால் துக்கம் கிடையாது என்பதாலும் விதவை கர்ப்பமாய் பிள்ளை பிறந்தால் அதை தாயே கழுத்தைப் பிடித்து நசுக்கி கொன்று விடுவதாலும் சம்சாரம், மகள், தங்கை ஆகியவர்கள் விபசாரம் செய்தால்கொன்று விடுவதாலும், மற்றும்சொத்து விஷயமாய் தகப்பன் மகனைக்கொல்லுவதும், மகன் தகப்பனைக்கொல்லுவதும், அண்ணன் தம்பியைக்கொல்லுவதும் முதலிய காரியங்களாலும் இயற்கை அன்புக்கும், துக்கத்துக்கும் எவ்வளவு பலம் இருக்கின்றது என்பதை ஒருவாறு உணரலாம்.

ஆதலால் அங்கு ஒருவரை ஒருவர் எந்தக்காரணத்தைக் கொண்டும் எதிர்பார்த்திருக்கவேண்டியதில்லையாதலால் யார் செத்துப்போனாலும் யாரும் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. குழந்தை செத்தால் தாயிக்கு விசனம் இருக்காதா என்று கேட்கலாம். அதுகூட நிகழ அங்கு இடமில்லை. ஏனென்றால் அங்கு குழந்தைகள் எல்லாம் பெரிதும்சர்க்கார் ஆதரணையில் வளர்க்கப்படுகின்றன. ஒரு தாய் தன் குழந்தையைப்பார்க்கவேண்டுமானால் குழந்தைகளுள்ள அரைக்குள் சென்று தேடிப் பார்த்துதான் எடுக்கவேண்டும். குழந்தைக்கும் தாயிக்கும்உள்ள அறிமுகமேகுழந்தை வளர்க்கும் தாதிக்குள்ளஅறிமுகத்தில் 100ல் ஒரு பங்குதான் இருக்கும்.

சாதாரணமாக ஒரு குழந்தை இறந்துபோனதற்காக அதன் தாய் தந்தையர்களுடைய துக்கத்துக்கு ஏதாவது ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால் ஒரு ஆஸ்பத்திரியில் உள்ள வியாதியஸ்தன் இறந்து போனால் டாக்டருக்கு உள்ள துக்கம்எவ்வளவோ அவ்வளவுதான் இருக்கவேண்டும் என்று சொல்லலாம். ஏனென்றால் தாயானவள் அக்குழந்தையைப்பெற்றதைத்தவிர மற்றபடி அக்குழந்தைக்காக யாதொரு கஷ்டமும் நஷ்டமும் அடைந்திருக்கமாட்டாள்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்பார்க்க.)

# திருவாரூர், செங்குந்தர் வர்த்தகர் மகாநாடு.

## தோழர் வி. எஸ். செங்கோட்டையா தலைமை உரை.

12—3—33ல் நடந்த திருவாரூர் செங்குந்த வர்த்தக மகாநாட்டில் தோழர் வி. எஸ். செங்கோட்டையா அவர்கள் தலைமைப் பேருரை:—

அறிவிற்சிறந்த சீமாட்டிகளே !

பெரியோர்களே !!

சகோதரப் பிரதிநிதிகளே!

திவ்ய க்ஷேத்திரமான திருவாரூரில் நடைபெறுகிற நமது மரபினர் வர்த்தகர் மகாநாட்டில் தலைமை வகிக்கும்படி என்னை அழைத்த உபசரணைக் கமிட்டியாருக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

### நமது நோக்கம்.

நமது மரபினர்கள் வர்த்தகத் துறையில் அபிவிருத்தி அடைவதற்கு ஏற்ற மார்க்கங்கள் எவை? நமது சமூகத்தைச் சேர்ந்த வியாபாரிகளுக்குக் கிடைக்கக் கூடிய லாபம் நம்மில் ஒரு சிலருக்கு மட்டும் பயன்படுவதல்லாமல் நம்மைச் சேர்ந்த ஏழைச் சகோதரர்களுக்கும் பயன்படும்படி செய்வதற்கு என்ன உபாயங்கள் தேவை, என்பன போன்ற விஷயங்களைத் தீர்க்கமாக ஆலோசித்து அதை ஒட்டிய தீர்மானங்களை தக்கபடி அமுலுக்குக் கொண்டுவரும் வகையில் எப்படி நமது சங்கத்தை பலப்படுத்தலாம் என்பது தான் இம் மகாநாட்டின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டுமென்பது எனது கோரிக்கை. சிறப்புடன் வாழ்ந்த நமது முன்னோர்களும் தற்காலத்தில் மேதாவிகளான பிற நாட்டினர்களும், நம் நாட்டு வியாபாரசிகாமணிகளும், நமது தேச பக்தர்களும், நமக்குவழி காட்டிகளாய் இருக்கிறார்கள். நாம் ஏற்றுக் கொண்ட கைங்கரியம் பூர்த்தி அடைய மேற் கூறியவர்களின் லட்சியங்களை மனதிலிருத்தி, அவர்கள் வழியைப் பின் பற்ற முயல வேண்டும்.

### வர்த்தக இந்தியா.

உபநிடதத்தில் சொல்லப் பட்டிருக்கிறதாவது. "தங்கள் ராஜ்யத்தில் வர்த்தகம் நடத்துபவர்கள் சத்தியவான்களா யிருக்கிறார்களா?" என்று நாரதர் தர்ம ராஜனைக் கேட்டாராம். "நாலும் தனிகளும் கொடுத்து உதவுவதோடு நெசவுக்காரர்களுடைய குடும்பத்தாருக்கு நாலைந்து மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களும் கொடுத்து உதவி வருகிறார்களா? இது போல இதர தொழிலாளர்களையும் அரசாங்கம் காப்பாற்றி வருகிறதா" என்ற கேள்விகளையும் நாரதர் கேட்டதாக மஹா பாரதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பூர்வ இந்தியாவிலே வர்த்தகர்களையும் தொழிலாளர்களையும் பாதுகாப்பது அரசாங்கத்தாரின் கடமையாக இருந்ததென்பது இதனால் விளங்குகிறதல்லவா? இதனால்தான் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் நெசவுத் தொழிலைக் கைக்கொள்ளவும் அழியாப் புகழ் பெற்ற திருக்குறளை உலகத்திற்கு கொடுத்துதவவும் சாத்தியமாய் இருந்தது. ஆகையால் வர்த்தகத்தில் கவனத்தைச் செலுத்துவதும் கலைகள்வளர்ச்சியில் நேரத்தைச் செலவிடுவதும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட காரியங்கள் அல்ல என்பது இந்த சம்பவங்களிலிருந்து நன்றாய் விளங்குகின்றது.

இந்துக்களுக்குப் பொதுவாகக் கடவுள், மோக்ஷம், மறு ஜன்மம் ஆகிய விஷயங்களில் தான் மனம் நாடுகின்றது, இல்லற வாழ்க்கைக்குத் தேவையான அம்சங்களில் விசேஷ கவனம் செலுத்துகிறதில்லை என்று ஒரு சார்பார் நினைப்பது ஆதாரமற்ற அபிப்பிராயம் என்பதைச் சரித்திரக்காரர்கள் தற்காலத்திலெடுத்துக் காட்டுகிறார்கள். இதற்கு,

"அருளிலார்க் கவ்வுலகமில்லை
பொருளில்லார்க் கிவ்வுலக
மில்லை தியாங்கு."

என்கிற திருக்குறளே தக்க சான்றாகும். "திரை கடலோடியும் திரவியந்தேடு" இது ஔவைப் பிராட்டியின் மொழி. பொருள் சேகரிப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் அவசியமில்லைஎன்பதுஇதன் கருத்து அல்ல. தனத்தைச் சேகரித்தவரையில் அவரவர் குடும்பத்தினருக்கும் சுற்றத்தார்களுக்கும், ஏழைகளுக்கும் அதை உபயோகப் படுத்துவதுதான் பெரிய மனிதர்கள் செய்ய வேண்டிய சிறந்த சேவை. இவ்வழியைப் பின் பற்றும் பெரியோர்கள் உள்ள சமூகந்தான் மதிப்பிற்குரிய சமூகமாய் விளங்கும்.

### பிற நாடுகள்.

வியாபாரத்துறையில் அபிவிருத்தி அடைந்த அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் அங்கு பல கோடீஸ்வரர்களும், தர்மிஷ்டர்களும் இருப்பதாகத் தெரிகிறது. போர்டு (Ford) என்கிற பெரியார் தமது மோட்டார் கம்பெனியின் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நவீன முறையில் தொழில் கற்றுக் கொடுப்பதுடன் அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தவர்களுக்கும் தேவையான கல்வி வசதி, சுகாதார வசதி, போக்குவரத்து வசதி, ஆகிய இவைகளை தாராள சிந்தையுடன் ஏற்படுத்தி வருகிறார். இது போலவே ராக்பெல்லர் என்ற பெரியாரும் ஏழைமக்களுக்கு உதவக் கூடிய பல வழிகளில் தமது செல்வத்தை உபயோகித்து வருகிறார். உலகப் பிரசித்தி பெற்ற ராக்பெல்லர் சங்கத்தின் சுகாதார இலாகாவின் பிரதிநிதியாகச் சில தினங்களுக்கு முன் கன்னி பியர்ட் அவர்களும் அவர் சகோதரியும் கோயமுத்தூரையும் அங்குள்ள இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்ந்த சிசு தர்மசாலைகளையும் பார்வையிட்டார்கள். பொதுவாய் சுகாதாரத்தையும், குறிப்பிட்டு சிசு பரிபாலன வசதிகளையும் ஆதரிப்பதற்காக அமெரிக்காவுக்கு மட்டுமல்ல இந்தியா தேசம் உள்பட உலகெங்கும் ஒருங்கே பிரயோஜனம் அடையும்படி ராக்பெல்லர் சங்கத்தார் கோடிக்கணக்கான பவுன்களைச் செலவிட்டு வருகிறார்கள். இங்கிலாந்திலிருந்து இரண்டு உதாரணங்களை எடுத்துக் கொள்ளுவோம். கோக்கோத் தூள் விற்பனை செய்யும் கேட்பரி (Cadburys) கம்பெனியாரும், சோப் உற்பத்தி செய்யும் சன்லைட் கம்பெனியாரும் அவர்கள் லாபத்திலிருந்து அநேக ஆயிரம் பவுன்களை ஒதுக்கி வைத்து அவரது தொழிலாளர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செலவிட்டதால் நவீன வியாபார உலகத்தில் பேரும் புகழும் பெற்றிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் இது சமயத்தில் நான் குறிப்பிடவேண்டிய அவசியமென்ன? செல்வமென்பது அவரவர்களுக்கு மட்டுமல்லாமல் ஏழை மக்களுக்கும், பொது நன்மைகளுக்கும் பயன்படும்படி கடவுளால் அளிக்கப் பட்ட ஒரு சாதனம் என்பதையும் லோபபுத்திகொண்டு இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் இழந்துவிடுவது மடமையாகும் என்பதையும் விளக்கும் பொருட்டேதான்!

### தேசபக்தர்கள்.

நமது தேசத்தின் வர்த்தகம் விருத்தி அடைவதற்கு அரும்பாடுபட்டவர்களில்சிறந்து விளங்குபவர் டாடா குடும்பத்தினர். இந்தியா முழுதுக்கும் முதலாக பஞ்சு இயந்திர சாலையை ஸ்தாபித்த பெருமை காலஞ்சென்ற சர். ஜெம்ஷட்ஜீ நசர்வான்ஜீ டாடா என்ற பெரியாரைச்சேர்ந்தது. மேற்குத்தொடர்மலையில்உள்ளநீர்வீழ்ச்சியிலிருந்துமின்சாரசக்தியைஎடுத்து பம்பாய் கொண்டுபோய் இயந்திர சாலைகளுக்கும், டிராம் வண்டிகளுக்கும், ரயில் வண்டிகளுக்கும் சரசமாக விற்று லாபம் அடைய முடியும் என்கிறதான எண்ணம் தோன்றி அவர் குடும்பத்தாரின் சக்தியால் அப்படியே சாதிக்கப்பட்டு அது இன்றும் நடை பெற்று வருகிறது. மற்றும் வட இந்தியாவிலுள்ள ஒரு மலைப்பிரதேசத்தை நவீன நகரமாக்கி அவ்விடமுள்ள மகத்தான எஃகு சாலையிலிருந்து உற்பத்தியாகும் சாமான்களை இந்தியா முழுதும் சரசமான விலைக்கு விற்கக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். ஜெம்ஷட்பூர் அல்லது டாடா நகர் என்று விளங்கும் இடத்தில் வசிக்கும் தொழிலாளர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும், நிபுணர்களுக்கும் ஏராளமான ரூபாய் செலவில் நவீன வசதிகள் சேகரித்துக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மேலும் பெங்களூரில் ஏற்பட்டிருக்கும் டாடா ஆராய்ச்சி சாலையும் அன்னிய நாடுகளுக்குப்போய் உயர்தரக்கல்வி கற்றுவரும் இந்திய மாணவர்களுக்கு பொருளுதவி செய்யும் முறையும் அப்பிரபல குடும்பத்தாரின் தாராள குணத்தைக்காட்டுகிறது. இந்தியாவிற்குள் தபால்களை ஆகாய விமானங்கள் மூலமாக எடுத்துச்செல்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை வெகு சமீப காலத்தில் இப்பெயர் பெற்ற டாடா கம்பெனியார் பூர்த்தி செய்திருக்கிறார்கள். இவ்வளவு அற்புதமான காரியங்களைச்செய்து அழியாப்புகழ் பெற்ற இக் குடும்பத்தினர் ஒரு சிறு வகுப்பான பார்சி வகுப்பைச் சேர்ந்தவர்கள். அப்படியிருந்தும் பெரும்பான்மைக் கூட்டத்தைச்சேர்ந்த சிலர்கூட சாதிக்க முடியாத காரியங்களை இவர்கள் சாதித்துவிட்டார்கள். இந்த உண்மையை நமது மரபினர் சகலரும் ஆலோசிக்கவேண்டும். இது போலவே தமிழ் நாட்டில் நகரத்தார் மரபின் முன்னேற்றத்தைப் பற்றி சற்று கவனிப்போம். அவர்களும் ஒரு சிறுபான்மை கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் திரை கடலோடியும் திரவியம் தேடும் சக்தியைக் கொண்டவர்கள். கடவுள், பக்தி, தர்மசிந்தை, திடநம்பிக்கை, விடாமுயற்சி, மனோபலம், புத்திக் கூர்மை ஆகிய குணங்களுடன் எங்கும் புகழ் பெற்றிருக்கிறார்கள். சத்திரங்கள், கோயில்கள் கட்டுவது, புதுப்பித்தல் போன்ற பழயமாதிரி

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

---

(?-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதனிடம் அதிகமாகப் பழகிக்கொஞ்சிக் குலாவியும் இருக்கமாட்டாள். தனது பிற்கால வாழ்வுக்கும் அதை பிரமாதமாய் நம்பியும் இருக்கமாட்டாள். ஆதலால் சாவு விஷயத்தில் மற்ற நாட்டு துக்கத்துக்கும் ரஷிய நாட்டு துக்கத்திற்கும் சிறிதும் ஒப்புமையே கிடையாது. இல்லாம் ஆரவாரம், மூவாசை ஆகியவை அங்கில்லை.

தொடரும்.

# பார்ப்பன சூக்ஷியும், பணக்காரர் மோசமும்.

(தோழர் டி. வி. முருகேசன் எழுதுவது.)

தோழர்களே!

வஞ்சக நெஞ்சம் படைத்த பிராமணர்கள் நமது பிராமணரல்லாத சமூகத்தை நயமாக பாழடையச்செய்த சூழ்ச்சியைப்பற்றி சிறிய உதாரணம் சொல்லுகின்றேன். நம்முடைய நாட்டில் உள்ள கோயில்கள் யாரால் கட்டப்பட்டது. எதற்காக கட்டப்பட்டது என்பதை உங்கள் சொந்த பகுத்தறிவைக்கொண்டு சீர்தூக்கி பாருங்கள். இந்தியாவில் தருமகர்த்தாக்கள் யார் என்பதை சிந்தியுங்கள். கள்ளு வியாபாரி, கஞ்சாவியாபாரி, தானிய வியாபாரி, அதிக வட்டிவாங்கும் வியாபாரி ஆயிரக்கணக்கான விவசாய தொழிலாளிகள் இரத்தத்தை இரவு பகலுயாக பிழிந்து சாப்பிடும்ஜமீன்தார், தனக்குபணம்வரும் வழிதெரியாத நிலைமையில் இருக்கும் இராஜா ஆகிய கூட்டங்களினாலுமே தான் பரிபாலிக்கப்படுகின்றன. ஏழைகள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ சம்பாதிக்கும் பணத்தைக்கொள்ளையடித்து கோவில் கட்டப்படுகிறது. என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் ஏழைகளை கயிலாயமோ வைகுண்டமோ ஒன்று இருப்பதாக சொல்லும் பூச்சியிடம் அனுப்புவதற்காக அல்லது ஏழைகள் கல்வி, அறிவு, கேள்வியில் தேர்ச்சியடைய வேண்டும் என்னும் காருண்யமா அவர்கள் கோவில் கட்டுவது என்று ஆராய்ச்சி செய்தால் கிஞ்சிற்றேனும் இவர்கள் அப்படிப்பட்ட எண்ணம் கொண்டு செய்வதாக எண்ணுவதற்கில்லை. அல்லது இவர்கள் சொந்த பகுத்தறிவைக்கொண்டுதான் கோவில்கட்டப்படுகின்றதா என்றுபார்த்தால் அதுவுமில்லை. இடையில் தோன்றிய பிராமணர்கள் செய்து வைத்த நூலின் நம்பிக்கையும் பிராமணர்களை அடிபணிந்து அவர்கள் உபதேசிக்கும் பொய் மூடடையை மெய்யெனநம்பி இவர்கள் மோசம் போகின்றனர்கள். எந்த விதமான மோசமும் பாவமும் செய்தாலும் கோவில் கட்டிவைத்தால் எல்லாபாவமும் பறந்து போய் விடும் இனிபிறவா பேற்றையடையலாம் என்றகுருட்டுநம்பிக்கைவைத்து இப்படிப்பட்ட கோவில் கட்டும் மூடபழக்க வழக்கத்தை கையாளுகின்றனர்.

அன்பர்களே! இனிநாம், கள்ளுக்கடைவியாபாரிகளுக்கும், கஞ்சாகடை வியாபாரிகளுக்கும், வட்டிக்கடை வியாபாரிகளுக்கும், ஒரு அணுபொருளை மனங்கூசாது இரண்டணுவுக்குவிற்கும் தானியவியாபாரிகளுக்கும், ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் இரத்தத்தைபிழிந்து சாப்பிடும் முதலாளிகளுக்கும், ஜமீன்தார்களுக்கும், சிற்றரசர்களுக்கும் நாம் சிறந்த பாடத்தை கற்பிக்கவேண்டும். அதாவது இனி கோவில் கட்டவேண்டாம். குளம் வெட்டவேண்டாம். அஞ்ஞானமடாதிபதிகளுக்கும் அடாத காரியஞ்செய்யும் பிராமணர்களுக்கும் கொடுக்க வேண்டாம். ஏழை மக்களுக்கு உண்ண உணவும், உடுத்தவுடையும் கற்றுக்கொள்ள கல்வியும்கொடுங்கள் இதுதான் உங்களுக்கு "மோக்ஷம்" அளிக்கும். மருந்து என்று அவர்கள் செவிபட அறிவிக்கவேண்டும். நம்ஏழைகள் போடும் கூச்சல் செவிடன் காதில் ஊதிய சங்கைப்போல் திரும்பி பாராது மீண்டும் கோவில் கட்டினால் நாம்அதை திரும்பிபாராது இருந்தால் அவர்கள் கட்டிய கோவில், கட்டியவர்கள் குடியிருக்கவும் இவர்களைக்கட்டச்சொல்லிய பிராமணர்கள் குடியிருக்ககூட உபயோகமில்லாமல் பாழடைந்து விடும். அவர்களே பாவம் தொலைய கோவில்கட்டினது, எழுதலைமுறையும் பாவம் தேடிக் கொண்டதாக முடியும். கும்பகோணத்து குளத்தில் குளித்தால் பாவம் போகும் என்று போய் சேத்தை பூசி வரும் கதையைப்போல் முடியும். ஆனதால் எல்ல வல்லமையும் நம்மிடமிருக்க நாம் ஏன் உறக்கங்கொள்ள வேண்டும். தோழர்களே! வீரிட்டு எழுங்கள் வியாபாரிகளே! ஜமீன்தார்களே! இராஜாக்களே! ஏழைகள் விடும் கண்ணீர் வீண்போகாது என்பதை மனதில் வையுங்கள். தொழிலாளர் வாழ்க! தொழிலாளர்சங்கக்கொடிவாழ்க.

---

## "சன்மார்க்கன்"

### உயரிய தமிழ்மாதப் பத்திரிக்கை.

சமய, சமூக, அரசியல் கிளர்ச்சிகளை பகுத்தறிவுக்கேற்றவாறு சன்மார்க்க வழியிற் கூறுவது. அறிஞர்களின் பல அரிய கட்டுரைகளைத் தாங்கி டிம்மி 1/8 அளவில் வெளிவருகின்றது. சித்திரையிலிருந்து 3வது ஆண்டு தொடங்குவதால் விரைவில் சந்தாதாரராகச் சேருங்கள்.

ஆண்டு சந்தா ரூ 1—0—0
வெளிநாடு ரூ-1—8—0.
தனிப்பிரதி ரூ.0—2—0.

(ஆசிரியர்)
சுவாமி சிவநேசம்.
"சன்மார்க்கன்" திண்டுக்கல்

---

# "பணக்காரர்களே பகற் கொள்ளைக்காரர்கள்"

(என். டி. எம். கமலம் பாடியது.)

(பண்டித மோதிலால் நேரைப்பறிகோடுத்தோமே என்றமெட்டு)

பல்லவி.

பாழும்பணக்காரர் கொள்ளும் பகற்கொள்ளையே. (பா)

அநுபல்லவி.

பகற்கொள்ளையே ஏழை படும் தொல்லையே. (பா)

சரணம்.

ஏழ்மையான நமதுமக்கள் எக்நாளும் உழைத்ததினால்
பாழும் பணக்காரரிடம் பணமும் சேர்ந்ததே
பணமும் சேர்ந்ததே ஏழையின் பயனால் சேர்ந்ததே. (பா)

திட்டமுடன் நமது மக்கள் சேமித்தப்பொருள் தனக்கே
வட்டிஎன்றும் வாசிஎன்றும் வாங்கும் கொள்ளையே
வாங்கும் கொள்ளையே எங்கும் ஓங்கும் தொல்லையே (பா)

(தொகையரா)

ஐயையோ நம்நாட்டில் அநேகியாய் ஏழைகள்
அலரியே வாடுகின்றார்
அதை சற்றும் எண்ணாமல் அகங்கொண்ட தனவந்தர்
அரித்துமேபொருள் சேர்க்கின்றார்
இந்நாட்டில் ஏழைகள் என்றிடும் தொழிலாளர்
இல்வாழ்வுக்கேற்ற பொருளயாது மீட்ட
நம்நாட்டு தனவந்தர் நயவஞ்சகத்தினால்
நம்மிடம் வட்டிஎன்றே.

(சரணத்தொடர்)

ஒன்றுக்குப் பத்தாறாய் உலகிலுள்ள ஏழையிடம்
அன்றும் இன்றும் வாங்கித்தின்னும் அதிககொள்ளையே
அதிகக்கொள்ளையே ஐயோ அநியாயக்கொள்ளையே. (பா)

(தொகையரா)

பகல் இரவாய் உழைத்திடும் பண்ணையாள் என்போர்க்கு
பசிதீர பலன்தராமல்
பசியினால் வாடவிட்டு அவர் உழைப்பினால் வந்திடும்
பலனையே தின்றுமென்மேல்
தொந்திகள் பெருக்கவும் தொழிலாளர் பதைக்கவும்
சொந்தமாய் வட்டி என்று
நம்தேய மக்களை நசுக்கியே பிழிந்துமே
நடுப்பகல் கொள்ளையைப்போல்.

(சரணத்தொடர்)

கொண்டு போகும் தனவந்தர் குவலயத்தில் கள்வராவர்
தொண்டு செய்யும் நாம் இதனைக் கண்டிதாளோமே
கண்டுதாளோமே இன்றேமன் முடிமீள்வோமே. (பா)

---

## சட்ட மெம்பர் கனம் கிருஷ்ணன் நாயர்.

சென்னை அரசாங்க சட்ட மெம்பர் கனம் சர் கிருஷ்ணன் நாயர் அவர்களுடைய உத்தியோக காலமானது 25-4-33 தேதியோடு முடிவடைகின்றதை மறுபடியும் ஒரு வருஷகாலத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

## திருவாங்கூர் திவான்.

திருவாங்கூர் திவான் தோழர் டி. ஆஸ்டினின் உத்தியோக காலம் 1933ஆம் பிப்ரவரி மாதத்தில் முடிவடைகிறது. அவரது உத்தியோக காலத்தை திருவாங்கூர் தர்பார் மேலும் 2வருடத்திற்கு நீடித்திருப்பதாகத் தெரிகிறது.

விருதுநகர் ஆண்டு விழா.

# ஈ. வெ. இராமசாமியும், வல்லத்தரசும்.

## 1000 பேர் ஊர்வலம்.

விருதுநகர் நாடார் பரிபாலன சங்க 6-வது வருட ஆண்டு விழா அழைப்புக்கு இணங்கி தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, முத்துசாமி வல்லத்தரசு, நாகை மணி, மதுரை வக்கீல் டி. நாராயணன், மதுரை சு. ம. சங்கக் காரியதரிசிகள், வெங்கிடசாமி, ஏ. எஸ். அருணாசலம் முதலிய பலர் 28-3-33-ந் தேதி காலை 9-மணிக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் விருதுநகர் வந்து சேர்ந்தவுடன், ரயில்வே ஸ்டேஷனில் அனேகர் வந்து எல்லோருக்கும் மாலையிட்டு "பணக்கார ஆதிக்கம் ஒழிக" "முதலாளிகள் ஆட்சி அழிக!" சோம்பேரிகள் சூழ்ச்சி மாழ்க" என்ற கோஷங்களுடன் வரவேற்று இரட்டைக்குதிரைசாரட்டு வண்டியில் பாண்டு வாத்தியங்களுடன் ஊர்வலமாக நாடார் பரிபாலன சங்கத்து ஆண்டுவிழா மண்டபத்துக்கு அழைத்துச்சென்றார்கள். கடை வீதியில் வழிநெடுக ஊர்வலத்தை நிறுத்தி நிறுத்தி மாலையிட்டும் புஷ்பங்களை வாரி இறைத்தும் முதலாளி ஆட்சி வீழ்க! பணக்கார ஆதிக்கம் அழிக! என்கின்ற பெரும் கோஷத்துடன் வாலிபர்கள் செய்த ஆரவாரங்களானது ஊர்வலத்தில் சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேலாகவே கலந்துகொள்ளும்படி செய்துவிட்டது. ஆண்டுவிழா மண்டபம் நிறைந்து இரண்டுபங்கு ஜனங்களுக்கு மேலாகவே வெளியில் நிற்கும்படியாக சேர்ந்தது. அவர்களில் முன்னணியிலிருந்தவர்கள்.

லோகல்போர்ட் சேர்மன், தோழர் எம் எஸ். பி. எஸ். பெரியசாமி, கௌன்சிலர்கள் தோழர்கள் சி. வெயிலுமுத்துசாமி, கூ. பெ. மகாலிங்கம், கே. சம்பந்தன் அ. திருவண்ணாமலை, ஏ. ச. அ. பழனியப்ப நாடார், சு. மாரிமுத்து, ஹெல்த் ஆபீசர் கோபால், கிருஷ்ண நாயுடு, டாக்டர் வெலாக்காரல், மதுரை ஏ. என். வெங்கிடசாமி, டி. நாராயணன் பி. ஏ., பி. எல்., ப. விஜயகுமார்த்தி, புதுக்கோட்டை கே. முத்துசாமிவல்லத்தரசு, அ. ராகவன ஏ எஸ். அருணாசலம் முதலியவர்கள்.

ஆண்டுவிழா துவக்கியதும் தோழர் எஸ். பி. பாண்டியன் பி. ஏ. எல். டி., அவர்கள் தலைமைவகித்து தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு விருதுநகர் நாடார் பரிபாலன சங்கத்தாராலும், இளைஞர் சுயமரியாதை சங்கத்தாராலும், ஆதிதிராவிடர் சங்கத்தாராலும், நித்தியானந்த வாசகசாலையாராலும் நான்கு வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவைகளுக்கு பதிலாக எல்லாவற்றிற்கும் இப்போது சுருக்கமாக பதில் சொல்லிவிட்டு மற்ற விஷயங்களைப்பற்றி மாலை பொதுக்கூட்டத்தில் பேசுவதாக எடுத்துக் கொண்டு பேசியதாவது:—

ஈ. வே ரா. பதில்.

தலைவரவர்களே! வாலிபதோழர்களே! மற்றும் பல சங்கத்தினர்களே! இன்று இந்த ஆண்டுவிழாவுக்காக வந்த எனக்கு நீங்கள் அளித்த வரவேற்புக்கும், என்னிடம் காட்டிய அன்புக்கும் ஆர்வத்திற்கும் நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த ஆடம்பர வரவேற்பும் உபசாரப்பத்திரங்களும் எவ்வளவு உணர்ச்சியுடையதானாலும் கிளர்ச்சியாய் இருந்தாலும் ஏதோ ஒரு அளவுக்கு இயக்க பிரசாரத்திற்கும் வளர்ச்சிக்கும் ஊக்க மூட்டுவதற்கும் மக்கள் கவனத்தை இழுப்பதற்கும் பயன் படுகின்றது என்று சொல்லப் படுவதாய் இருந்தாலும் இப்போது வரவர எனக்கு இவைகள் ஒரு சடங்கு முறை போலவே தோன்றுகின்றன. இந்தப்படி வாயில் சொல்லிக்கொண்டே நானும் இந்த காரியங்களுக்கு உடன்பட்டுக்கொண்டே வருகின்றேன். என்றும் இவை அனாவசியம் என்றோ தவறு என்றோ பட்டவுடன் நிறுத்திவிடவேண்டியதே கிரமமாகும். என்றும் சொல்லுவதில் குறை இருப்பதாக நினைக்கவில்லை.

ஆனால் இப்போது நிறுத்தப்படுவது சிலருக்கு அதிருப்தியாகவும், சிலருக்குவிஷமம் செய்யஇடம்கொடுப்பதாகவும் இருக்கக்கூடும் என்றும் ஒரு சமயம் இயக்கத்தைப்பாதிக்கக் கூடியதாகும் என்றும், சில நண்பர்கள் சொல்லுவதால் நானும் நீங்களும் வெகு ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதும் சமீபத்தில் நடக்கப் போவதுமான மாகாண மகாநாட்டில் ஊர்வலம் உபசாரப்பத்திரம் மலர்மாலை ஆகிய ஆடம்பரங்களை நிறுத்துவது என்பதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றிவிட்டு இவைகளை நிறுத்தப்படவேண்டுமென்று கருதி இருக்கிறேன்.

தோழர்களே! இதுபோலவே இனியும் அனேகவிஷயங்கள்சடங்குகள்போல் சு-ம. இயக்கத்திலும், நடைபெற்று வருகின்ற விஷயம் எனக்குத்தெரியும். அவைகளையெல்லாம் சிறிது சிறிதாக குறைத்து வந்து முடிவில் அடியோடு எடுத்துவிட முயற்சித்து வருகிறேன். இப்படிப் பட்ட பலகாரணங்களால்தான் சு-ம இயக்கம் புரட்சி இயக்கமென்று சொல்லப்படுகின்றது.

ஒரு ஏழைக்கும், செல்வவானுக்கும், ஒரு முதலாளிக்கும் அவனது காரியஸ்தர்களுக்கும், ஒரு எஜமானுக்கும், அவனது அடிமைக்கும், இருந்து வரும் வித்தியாசங்களும் நடப்புகளும், வெறும் சடங்குமுறை போலவும் பழக்க வழக்கம் என்பதை ஆதாரமாய்க்கொண்டும் நடந்து வருகின்றனவேஒழிய அதில் ஏதாவது நியாயமோ அறிவுக்குப் பொருத்தமான காரணங்களோ இருக்கின்றனவா என்று பாருங்கள். முதலாளி சுகப்படுவது, தொழிலாளி கஷ்டப்படுவது என்பது எதை ஆதாரமாய்க்கொண்டது என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். பார்ப்பான் மேல்ஜாதி, பறையன் கீழ் ஜாதி என்பதற்கு எது ஆதாரமோ அதுதான் இந்த ஏழை பணக்காரன், முதலாளி தொழிலாளி, என்கின்ற பழக்கத்திற்கும், நடப்புக்கும் ஆதாரமாய் இருக்கின்றது. பார்ப்பான், பறையன் மேல்ஜாதி, கீழ்ஜாதி, ஆகியவை கூடாது என்று நாம் கூறும்போது நம்முடன்கூட இருந்து யார் யார் நமக்குப்பின் தாளம் போட்டார்களோ அவர்கள் எல்லாம் இப்போது முதலாளி, தொழிலாளி, ஏழை, பணக்காரன் என்கின்ற பாகுபாடும், வித்தியாசமும் ஏன் என்று கேள்க்க ஆரம்பித்தவுடன் நம்மைவிட்டு ஓட ஆரம்பித்துவிட்டார்கள். அதுமாத்திரமல்ல நம்மை குறைகூறவும் ஆரம்பித்துவிட்டார்கள். இதன் பயனாய் நமக்கு புதியபுதிய எதிரிகள் உண்டாகிக்கொண்டு வருகின்றார்கள். பணக்காரர்களைவிட சோம்பேரியாய் இருந்து இயக்கத்தின் பெயரைச் சொல்லி வயிறுவளர்த்துக்கொண்டவர்கள் எல்லாம், இபபொழுது புதிய எதிரிகளாக வருவார்கள். இவைமாத்திரமல்ல இனியும் தாய், தகப்பன், அண்ணன், தம்பி முதலியவர்களும் எதிரியாவார்கள். மற்றும் நம்ம பின்னால் வெலுக்காய் திரிந்து கொண்டிருந்த தோழர்களைப் பற்றியோ வென்றால் சொல்லவேண்டியதேயில்லை. இனி நாளாக நாளாக இவ்வியக்கத்திற்கு ஏழை மக்களும் பாடுபட்டு உழைத்து தங்கள் பயனை அன்னியர்கள் அனுபவிக்கவிட்டுக்கொண்டு கஷ்டப்படுகின்ற மக்களுந்தான் நமக்கு உற்ற துணைவர்கள் ஆவார்கள்.

பணக்காரர்களை நம்பி அவர்கள் தயவால் சோம்பேரியாய் இருந்து வாழ்ந்துவரும் மக்கள் ஒருநாளும் நமக்கு உதவிபுரியமாட்டார்கள். இவர்கள் சங்கதிகளே இப்படியிருக்குமானால் அரசாங்கத்தினரின் யோக்கியதையைப்பற்றி நான் சொல்லவேண்டுமா? ஆகவே மேற்கண்ட எதிர்ப்புகளைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் தைரியமாய் தலைகொடுத்து அவைகளை சமாளித்தாகவேண்டும் என்பதில் குற்றமென்ன என்பதை யோசித்துப்பாருங்கள்.

நாம் யாரை விரோதித்தாலும், யாரை நேசித்தாலும் நமது கருத்து ஒன்றேயாகும். அதாவது படித்தவர்கள் என்றும், பணக்காரர்கள் என்றும், அரசாங்கத்தார் என்றும் சொல்லிக்கொண்டு ஏழைகளின் ரத்தத்தை எவரும் உறிஞ்சக்கூடாது என்பதேயாகும்.

படித்தவனும், பணக்காரனும் அரசாங்கமும் பாடுபட்டு உழைக்கும் மக்களுடைய நன்மைக்கும், அம்மக்களுடைய உழைப்பின் பயன் முழுவதும்அம்மக்களே அடையும்படியான காரியத்திற்கும் எதிரிகளாய் இருப்பவன்களேயானால் அவன்கள்எல்லோரும் உலகில் இல்லாமல் மறையவேண்டியவர்களேயாவார்கள். இதற்காக உழைக்காத இயக்கமோ மனிதனோ உலகில் இருப்பதும், இறப்பதும்இனிஒன்றேயாகும். மற்றுமமனிதசமூகத்தினிடம் ஒய்வு சாந்தி நிலவி, பொறாமை, துவேஷம், அசூயை, ஆகியவை ஒழியவேண்டுமானால் சமதர்மத்தைத்தவிர வேறு வழியில்லை என்று சொல்லிவிட்டு மேலால் சொல்லவேண்டியவைகளை மாலையில் பொதுக்கூட்டத்தில் சொல்லுவதாக சொன்னார் பிறகு பகல் 12-மணிக்கு கூட்டம் கலைந்தது.

---

## பூரண விடுதலை என்பதை நிறைவேற்றிய காங்கிரஸ், காந்தியை வட்டமேஜைக்கு ஏன் அனுப்பிற்று?

---

## சட்டமறுப்புச் செய்த காந்தி இர்வினுடன் ஏன் ராஜி பேசினார்?

# விருதுநகரில் சுயமரியாதைப் பொதுக்கூட்டம்.

## 2000 பேர்களுக்கு மேற்பட்ட கூட்டம்.

சென்ற 28-3-33 தேதி 7-30 மணிக்கு விருதுநகர் அம்மன் கோவிலுக்கு முன்புறம் சுயமரியாதை சங்க சார்பாக ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி மதுரை தோழர் டி. நாராயணன் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் கூடிற்று.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள தோழர்கள்:—

கூ. மு. அ. சி. வெயிலு முத்து நாடார் கவுன்சிலர், கூ. பொ. மகாலிங்கம் கவுன்சிலர், வை. திருவண்ணாமலை, மா. தனிக்கோடி கவுன்சிலர், வ. பழனியப்பன், கவுன்சிலர், க. மாரிமுத்து, சி. முனியாண்டி நாடார், சின்னமணி பாகவதர், அமெரிக்கன் குருசாமி, சிவந்தி நாராயண நாடார், வ. பெ. சு. சண்முகநாடார், பாண்டியன் பி. ஏ. எல். டி., சங்கரலிங்கம், பி. ஏ., பரமசிவம், பி. ஏ., வேலுச்சாமி பி. ஏ., தாசன் பி. ஏ. எல். டி., சிவந்தி சிதம்பரம், ல. பெ. பெரியகருப்பன், ல. பெ பக்ஷக்கண்ணு நாடார், மதுரை எ. என். வெங்கடசாமி, ஏ. எஸ். அருணாசலம், ப. வ. வ. விநாயகமூர்த்தி, கூ. மு. வ. ஆறுமுகம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஞானதேசிகம், அருப்புக்கோட்டை கு. அ. முத்துநாடார், வீரய்யா, பொ. தி. கருப்பையா, சிவகாசி பெ. மு. பெரியணன், சங்கிலி, வெள்ளையப்பன் மற்றும் சாத்தூர், திருமங்கலம், ராஜபாளையம் முதலிய இடங்களிலிருந்தும் அநேகர் வந்திருந்தனர்.

கூட்ட ஆரம்பத்தில் தோழர் இரத்தினம் அவர்கள் சுயமரியாதைப் பாட்டுகள் பாடினார்.

பிறகு தலைவர் தோழர் நாராயணன் அவர்கள் முகவுரையாக சில வார்த்தைகள் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும் தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, வல்லத்தரசு ஆகியவர்களைப்பற்றியும், ரஷ்யக்கொள்கையைப் பற்றியும் பேசினார்.

### வல்லத்தரசு.

பிறகு தோழர் வல்லத்தரசு அவர்கள் பேசியதின் சாரமாவது:—

ஏழை பாடுபட, சோம்பல் நிறைந்த பணக்காரர்கள் பலன் பெற்றுவாழ்வது மனித சமூகதர்மம் அன்று. சுயமரியாதை இயக்கத்தில் சமதர்மம் நிறைந்த அரசியல் திட்டமொன்றை நிறுவுதல் முக்கியமான காரியமாகும். ‘தனியொருவனுக்கு உணவு இல்லை எனின் செகத்தினை அழித்திடுவோம்’ எனபாரதியார் கூறியுள்ளவாறு பாடுபடும் ஏழைகளுக்கு குடிக்க கஞ்சிஇல்லாது பரிதவிக்கும் காட்சி பகுத்தறிவு படைத்த மனிதரின் மனத்தை கலக்கும் என்பதில் ஐயமில்லை. ஏழைகள் அழுதகண்ணீர் கூரியவாளொடு ஒக்கும். பணமும் பணக்காரர்களும் இந்த தத்துவத்திற்கு விரோதிகள் அல்லர். நாம் விரும்புவதெல்லாம் பணக்கார ஆதிக்கம் அழியவே அல்லாது வேறுஒன்றுமில்லை. பூமியில் விவசாய ஏழைமக்களால் உழைக்கப்பட்டு விளைவிக்கப்பட்டுவிளைவில் ஒரு பங்கு அன்னார்களுக்கிருக்க வேண்டும். நிலச்சுவான்தார்கள் தயாள சிந்தை காட்டுவதுடன் இதை சட்ட பூர்வமாக ஒப்புக் கொள்ளவும் வேண்டும். ஏழைகளின் பசி தீர உணவளித்து ஜாதி மதக்கொடுமைகளை நீக்கி பெண் மக்கள் தொழிலாளிகள் வாலிபர்கள் ஆகிய இவர்களின் நன்மைகளையே மேற்கோள்களாகக்கொண்டு ஏழைகளின் மனமொத்த ராஜ்யமே நமக்குத் தேவை. எனப்பேசினார்

### ஈ. வே. இராமசாமி.

பிறகு தோழர் ஈ. வெ. இராமசாமி பேசியதின் சாரம்:—

தோழர்களே! எனது ஐரோப்பிய யாத்திரையிலோ குறிப்பாக ரஷிய யாத்திரையிலோ நான் கற்றுக்கொண்டு வரத்தக்க விஷயம் ஒன்றும் அங்கு எனக்குக் காணப்படவில்லை. ஆனால் நமது சுயமரியாதை இயக்கக்கொள்கைகள் மிகவும் சரியானவை என்றும் அக்கொள்கைகளால் தான் உலகமே விடுதலையும் சாந்தியும் சமாதானமும் அடையக்கூடும் என்றும் தெரிந்தேன். இதுதான் உங்களுக்கு ஐரோப்பாவுக்குச் சென்று வந்தவன் என்கின்ற முறையில் சொல்லும் சேதியாகும்.

நாம் இந்த 7, 8 வருஷ காலமாகவே படிப்படியாய் முன்னேறிவந்திருக்கின்றோம் எனபதை நமது இயக்க வேலையை முதலில் இருந்து கவனித்து வந்திருப்பவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

சுமார் 15, 20 வருஷங்களுக்கு முன்பாக நாம் எந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று கருதினாலும் எது மக்களுக்கு நன்மையானது என்று கருதினாலும் அதையெல்லாம் அரசாங்கத்தைக் கொண்டே செய்யச சொல்லி கெஞ்சுவோம். அதற்கு பார்ப்பனர்களையே தரகர்களாய் வைத்து அவர்கள் சொன்னபடியெல்லாம் கேட்டு அவர்கள் பின்னால் திரிவோம். அவர்கள் சொல்லுவதையே நன்மை என்று கருதுவோம் அன்றியும அது அரசாங்கம் வேறுபார்ப்பனர்கள்வேறு என்று சொல்ல முடியாத காலமாய் இருந்தது. அந்தக் காலத்தில் பெரும் பணக்காரன், ஜமீன்தாரன், மீராசுதாரன் என்பவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள் காலடியில்தான் கிடந்தார்கள். அதிலிருந்து ஒரு பெரும் புரட்சி உண்டாயிற்று. அதுதான் ஜஸ்டிஸ் கட்சி புரட்சி என்பது. அது தோன்றிய பின்பு பார்ப்பனரல்லாத செல்வவான்களுக்கும் பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்பவர்களுக்கும் சற்று செல்வாக்கு தோன்றிற்று. பார்ப்பனர்களையே நம்பி இருந்த அரசாங்கமானது பார்ப்பனரல்லாதாரைத் தட்டிக்கொடுத்து அவர்கள் ஆதரவில் இருக்க வேண்டியதாயிற்று. இதன் பயனாய் பார்ப்பனர்கள் அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுக்கக்கருதி பார்ப்பனரல்லாத பாமர ஜனங்களை வசியம் செய்யத்தக்க சில புதிய சூக்ஷிகளைக்கையாள ஆரம்பித்தார்கள். அதன் பயனாய் பார்ப்பனர்கள் தன்மை இன்னது என்றும் அரசாங்கத்தின் தன்மை இன்னது என்றும் ஓரளவுக்கு வெளியாயிற்று. பிறகு அவை ஒரு புரட்சியாய் ஆயிற்று. அந்த இரண்டுவித கிளர்ச்சியும் சுயநலங்களையே அதாவது முன்னணியிலிருந்து கிளர்ச்சி செய்பவர்கள் அதிகாரமும் பதவியும் பெருவழியும் கவலை கொண்டு பாமர மக்களை ஆயுதமாக வைத்து போர் நடத்தியதால் இரண்டும் பலமற்று ஒரு தடவை ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெறுவதும் மறுதடவை காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுவதுமாக நிலையில்லாமல் இருந்து வந்தது. இந்த மாதிரியில் ஜஸ்டிஸ் கட்சி என்பதும் ஒரு தடவை நல்ல தோல்வியடைய வேண்டி ஏற்பட்டது.

இந்த சந்தர்ப்பம் நமக்கு நல்ல சந்தர்ப்பமாய் கிடைத்ததால் நாம் சமூக வாழ்க்கையில் ஒரு கிளர்ச்சி செய்ய முடிந்தது. இந்த மாதிரியான ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்காத பக்ஷம் நமது வேலைக்கு அவ்வளவு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது.

ஏனெனில் பார்ப்பனரல்லாதார்கள்ஜாதி வித்தியாசங்களையும்அதற்கு ஆதாரமான மத சம்பிரதாயங்களைப்பற்றியும் இவ்வளவு தூரம் கிளர்ச்சி செய்யசம்மதித்துஇருக்கவேமாட்டார்கள். பார்ப்பனரல்லாதாரியக்கம் என்னும் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைந்து மறுபடியும் அதுவெற்றியாவதற்குள் சுமார் 4 வருஷ காலத்துக்குள் அபரிமிதமானகாரியங்களைச் செய்திருக்கிறோம். இதை சமூக சம்பந்தமான ஒரு புரட்சி என்றே சொல்லவேண்டும்.

இப்பொழுது மேல்கண்ட அரசியல் கிளர்ச்சியும் சமூகக் கிளர்ச்சியும் நடத்தப்பட்டது போலவேதான் இப்போது பொருளாதாரத் துறையிலும் ஒரு கிளர்ச்சி செய்தாக வேண்டியிருக்கின்றது. இதுவெற்றி பெறுமா? இல்லையா? என்பதைப் பற்றிநாம்கவலைபட வேண்டியதில்லை. இது நியாயமா? அநியாயமா? அல்லது அவசியமா? அவசியமற்றதா? என்றுதான் பார்க்கவேண்டும். அரசியலைப்பற்றி என்னென்ன குற்றம் சொன்னோமோ சமூகத்தில் ஜாதி மதங்களைப்பற்றி என்னென்ன குற்றம் சொன்னோமோ அவைகள் எல்லாம் இன்றைய பொருளாதார இயலிலும் இருப்பதைக்காங்கின்றோம். எப்படி அரசாங்கம் என்பதற்காக சில மக்களின் உழைப்பு வீணாகின்றதோ, எப்படி மேல் ஜாதியான் என்பதற்காக சில ஜனங்கள் இழிவு படுத்தப்படுகின்றார்களோ அதுபோலவே தான் பணக்காரன் முதலாளி என்பதற்காக பல மக்களின் உழைப்பு வீணாக்கப்படுவதுடன் இழிவு படுத்தவும் படுகிறார்கள். இந்தக்காரணங்களால் பொருளாதார இயலில் ஒரு பெரும் கிளர்ச்சி செய்யவேண்டியது இப்போது அவசியமாகின்றது. இது இன்று நமது நாட்டுக்கு மாத்திரம் அவசியம் என்றுகாணப்பட்டதாக நினைக்காதீர்கள். இன்று உலகில் எங்கும் இவ்வுணர்ச்சி பரவி தாண்டவமாடுகின்றது.

ரஷியா தேசத்தில் இவ்வுணர்ச்சி தோன்றி பெரும் புரட்சியாக மாறி வெற்றி பெற்று இன்று காரியத்தில் நடைபெற்றும் வருகின்றது. ரஷியாவில் அரசியல் ஆதிக்கமோ ஜாதிமத ஆதிக்கமோ செல்வவான்ஆதிக்கமோ ஒன்றுமே கிடையாது. அந்த நாட்டிலுள்ள வாலிபர்களுக்கு அரசியல் என்றால் என்ன மதம் என்றால் என்ன ஏழை பணக்காரன் என்றால் என்ன என்கின்றவைகளுக்கு அருத்தமே தெரியாது.

மனிதரில், வாழ்க்கையில், கவலையில், பொருப்பில் ஒருவருக்கொருவர் எவ்வித வித்தியாசத்தையும் அறியார்கள். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை இங்கும் ஏற்படுவதில்யாருக்கும் எவ்வித கஷ்டமோ நஷ்டமோ இருக்காது. பணக்காரனென்றும் மேல் ஜாதிக்காரன் என்றும் அரசன் என்றும் சொல்லிக்கொள்ளப்படுவதில் ஒருவித செயர்க்கை திருப்தி ஏற்படுவதைத்தவிர இவற்றின் பயன்களால் இவர்கள் கவலையற்று,அதிருப்தியற்று சாந்தியாய்மனச் சமாதானமாயிருக்கிறார்கள் என்று யாரும் சொல்லிவிட முடியாது.

உலகம் தோன்றிய காலம் தொட்டு இதுவரை எத்தனையோ பேர் சாதாரண மனுஷர்களாகவும் ரிஷிகளாகவும், மகான்களாகவும் அவதார புருஷர்களாகவும் தெய்வத்தன்மை பொருந்தியவர்களாகவும் ஏற்பட்டு மக்கள் சமூக நன்மைக்காக என்று எவ்வளவோ காரியங்கள் செய்தாகி

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

## சென்னை இரண்டாவது,

# சுயமரியாதை மகா நாடு.

## ஆயிரக்கணக்கான தோழர்கள் விஜயம்.

### சுயமரியாதைத்தோழர்களின் வீரமுழக்கம்.

"சுயமரியாதை இயக்க லட்சியம்"
"சுயமரியாதை இயக்க சமதர்மக் கட்சியாரின்"
வேலைத்திட்டம் அப்படியே ஒப்புக்கொள்ளப்பட்டது.

—:0:—

சென்னை இரண்டாவது சுயமரியாதை மகாநாடு சென்ற டிசம்பர் மாதத்திலேயே நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. பல அசந்தர்ப்பத்தால் அம் மாதத்திலேயே நடத்தக் கூடாமல் போயிற்று.

முதலாவது சுயமரியாதை மகாநாட்டை சென்னை நகரத்தில் நடைபெற ஒட்டாமல் தடுத்து விடுவதற்காக எவ்வளவோ முயற்சிகள் செய்தும் தோல்வியடைந்த நமது பழைய எதிரிகளான மத வெறியர்களும் வைதீகர்களும், புராணவியாபாரிகளும், தேசியப் பார்ப்பனர்களும், வர்ணாச்சிரமப் புரோகித பார்ப்பனர்களும், மைலாப்பூர், திருவல்லிக்கேணி ;'/ உத்தியோகப்பார்ப்பனர்களும், வேறு சில சுயநலமிகளும் இந்த இரண்டாவது சுயமரியாதை மகாநாடும் சென்னையில் நடக்கவொட்டாமல் செய்ய வேண்டிய சூழ்ச்சிகள் எல்லாம் செய்து பார்த்தார்கள். இம்மகாநாட்டிற்குப் போட்டிமகாநாடு ஒன்று யாரோ கூட்டப்போவதாக வீண்வதந்திகளைப் பரப்பிப்பார்த்தார்கள். மகாநாட்டிற்கு இடம் கேட்க முடிவு செய்திருந்தவர்களையெல்லாம் பயமுறுத்தி இடம் கொடுக்காதீர்கள் என்றும் எச்சரித்துப்பார்த்தார்கள். தேசியத்திற்கும், மதத்திற்கும் விரோதமாக இம் மகாநாடுகூடுகின்றது.

சுயமரியாதை இயக்கம் கடவுள் இல்லையென்று கூறும் இயக்கம் அதில் அறிவுடையவர்கள் சேரமாட்டார்கள் என்றும் பிரசாரம் செய்தார்கள். மற்றும் ஏழை பணக்கார வித்தியாசமொழிந்து சமதர்மம் பரவவேண்டுமென்ற சோவியத் ரஷியதிட்டத்தைப் பரப்புகிறார்கள் என்றும் கவர்ன்மெண்டுக்கு மகஜர் அனுப்பி மகாநாட்டை சர்க்காரே தடுத்து விடுவார்கள் என்றும் பிரசாரம் செய்துபார்த்தார்கள். தேசியப் பத்திரிகைகளென்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பன மதப்பிரசாரப் பத்திரிகைகள் நமது இயக்கத்தையும் அதன் கொள்கைகளையும் தலைவர் ஈ. வெ. ரா. முதலியவர்களையும் தூற்றி எழுதி தப்புப் பிரசாரம் செய்து பார்த்தார்கள். இத்தகைய எல்லாருடைய எதிர்ப்புகளையும் வீண் தப்புப் பிரசாரங்களையும் தக்கப்படி நன்கு வரவேற்று சுயமரியாதை இயக்கப் பிரசாரத்தைசென்னை நகர் முழுதும்செய்வித்துமக்கட்கு உண்மையுணர்ச்சியையும்சமதர்மஎழுச்சியையும்சுயமரியாதைக்கிளர்ச்சியையும் பெருக்கிவிட்டது. அதன் பயனாக இன்று சென்னைநகரைச்சுற்றிலும் பல்லாயிரக்கணக்கான சுயமரியாதைத்தோழர்களும், பலசுயமரியாதை சமதர்மச் சங்கங்களும் தோன்றும்படி செய்துவிட்டதோடு இரண்டாவது மகாநாட்டை சென்னையில் 5-3-33யன்று கூட்டுவதென்று மிக்க ஆர்வத்துடனிருந்தார்கள். அதன்படி முடிவு செய்து 5-3-33யன்று ஞாயிற்றுக்கிழமைசென்னையில் இரண்டாவது சுயமரியாதை மகாநாடு நடைபெறுமென்று தக்கவிளம்பரங்களாலும், துண்டுப்பிரசுரங்களாலும், பொதுக்கூட்டங்களாலும் பொது ஜனங்கட்கு இரண்டுவாரங்களாக அறிவிக்கப்பட்டு அதற்கான எல்லா முயற்சிகளும் செய்விக்கப் பெற்றிருந்தது.

சென்னைஇரண்டாவது சுயமரியாதைமகாநாடு 5-3-33 ஞாயிற்றுக்கிழமையன்றுகாலை 9மணிக்கு சென்னை சிந்தாதிரிப்பேட்டைபாலத்தருகிலுள்ள ஆங்கிலோஇந்தியர் ஐரோப்பியர்சங்கஹாலில் கூடிற்று. மகாநாட்டுஹால் வெளியிலும், உள்ளும் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுயமரியாதை இயக்க நீதி வாக்கியங்களும் பலயிடங்களில் தொங்க விடப்பட்டிருந்தது. மகாநாட்டிற்கு சென்னை நகரைச் சுற்றிலுமுள்ள பல வெளியூர்களிலிருந்தும், செங்கற்பட்டு, காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், நாகப்பட்டணம், மாயூரம், கும்பகோணம், திருவாரூர், திரிசிரபுரம், ஆரணி, வேலூர், முதலியவிடங்களிலுமிருந்து பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள். சுயமரியாதை இயக்கத்தோழர்கள்ஆண்களும்பெண்களுமாக ஆயிரக்கணக்காக விஜயம் செய்திருந்தார்கள். மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த முக்கியமானவர்களின் விபரம் வருமாறு:—

தோழர்கள் சி. டி. நாயகம் தம்பதிகள், இராதா கிருஷ்ணன் தம்பதிகள், டி. என். இராமன் கனகாம்புஜம் தம்பதிகள், அருணகிரி சுந்தரி தம்பதிகள், எஸ். குருசாமி குஞ்சிதம் தம்பதிகள், வி. பி. எல் மணியார், தம்பதிகள் கே. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். (நாஸ்திக) சி. கே. குப்புசாமி, எல், இராமசாமி, மயிலை சீனிவாசன், சதாசிவம், பஞ்சசீலம், விசாகம், டி. துரைசாமி இராஜாமணி தம்பதிகள், முருகேசம், கங்காதரம், அமிர்த வாசகம், அய்யாக்கண்ணு, அ. பொன்னம்பலம், எல். விலிங்கம், டி. சுப்பிரமணியம், அசோகா தீனதயாளு, ரெங்கநாதன், கைவல்ய சாமியார், பக்கிரிசாமி, புருஷோத்தமன், ஈ. வெ. கி. மிராண்டா, முத்து, ராமையா, நடராஜன், தியாக ராஜன், சிம்பரம் முதலிய தோழர்களாகும்.

மகாநாடு காலை 9மணிக்கு ஆரம்பிக்கப்பெற்றவுடன் தோழர்களால் 'சமதர்மக்கீதங்கள்' பாடப்பெற்றன. பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்து "சுயமரியாதை இயக்கம்" "சமதர்மதிட்டம்" "நமது எதிர்கால வேலை" ஆகியவைகளைப்பற்றி ஒரு மணிநேரம் மிகவிளக்கமாகவும், விரிவாகவும் பேசினார்.

சென்னைதோழர்வி.பி.எஸ்.மணியர் அவர்கள் தமது வரவேற்புத்தலைமை பிரசங்கத்தை வாசித்து மகாநாட்டுப் பிரதிநிதிகளை நன்கு வரவேற்றார். (வரவேற்புப்பிரசங்கம் பின்னர் வெளிவரும்.)

மகாநாட்டுத்தலைவராக காஞ்சிபுரம் தோழர் சி. கல்யாணசுந்திரம் அவர்களைப்பிரரேபனைசெய்து தோழர் கே. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். அவர்கள் விரிவுரைநிகழ்த்தினார். தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்கள் அதை ஆமோதித்து விரிவுரை நிகழ்த்தினார். ஆமோதிப்பை யொட்டி திருவாரூர் தோழர் டி. என். இராமு அவர்களும் விரிவுரை நிகழ்த்தினார். பின் நீண்ட கரகோஷத்திடையே தலைவரைத் தேர்ந்தெடுக்கப்பெற்றதும் மகாநாட்டுத்தலைவர் தோழர் சி. கல்யாணசுந்திரம் அவர்கள் தமது தலைமைப் பிரசங்கத்தைப் படித்தார். (தலைமைப்பிரசங்கம் பின் வெளிவரும்.)

பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "சென்னையும், சங்கராச்சாரியும்" என்பதுபற்றி நீண்ட விரிவுரை நிகழ்த்தினார். அதன் பின்னர் மகாநாட்டிற்கு வரமுடியாமல் மகாநாடு இனிது நடைபெற வேண்டுமென்று தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, ஈ. வெ. கிருஷ்ணசாமி, வெரிவாடையா, விசாலாட்சி சுப்பையா, முதலியவர்களுடைய தந்திச்செய்திகளும், தபாலும் படித்துக்காட்டப்பட்டது. மகாநாட்டின் காலை நிகழ்ச்சி 12-30மணியுடன் முடிவடைகின்றது. இனிமீண்டும் மாலை 3மணிக்கு மகாநாடுஆரம்பமாகும் என்று தோழர் அ. பொன்னம்பலம் அவர்களால் அறிவிக்கப்பேற்றது.

### பிற்பகல் நிகழ்ச்சி.

மாலை 3மணிக்கு மகாநாடு ஆரம்பமாயிற்று. தோழர்கள் சமதர்மகீதங்கள் பாடினார்கள். தலைவர் இம்மகாநாட்டில் நிறைவேற்றியிருக்கும் தீர்மானங்களைப்படித்துக்காட்டி இந்தத் தீர்மானங்களை தோழர் அய்யாக்கண்ணு அவர்கள் பிரரேபணை செய்து பேசுவாரென்று கூறியமர்ந்தார். தீர்மானங்கள் விபரம் கீழ்வருமாறு:—

(1) சென்ற டிசம்பர் 28, 29 தேதிகளில் ஈரோட்டில் கூடி முடிவு செய்த "சுயமரியாதை இயக்க லட்சியம்" "சுயமரியாதைஇயக்கசமதர்மக்கட்சியாரின் வேலைத்திட்டம்" ஆகியவைகளை அப்படியே இம் மகாநாடு ஒப்புக்கொள்வதோடு சமீபத்தில் கூடவிருக்கும்மாகாண மகாநாட்டிலும் மேற்கண்டதிட்டங்களையும், லட்சியத்தையும்,ஒப்புக்கொண்டு அமுலில் கொண்டுவர வேண்டுமென்று இம் மகாநாடு கேட்டுக் கொள்கின்றது.

இத் தீர்மானத்தைத் தோழர் அய்யாக்கண்ணு அவர்கள் பிரரேபித்தார். தோழர்கள் ரெங்கநாதன், கங்காதரம், எல். இராமசாமி, எஸ். குருசாமி, பி. ஏ. எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி., அ. பொன்னம்பலம் முதலியவர்கள் ஆமோதித்துப் பேசினார்கள்.

2. மதங்களினாலும், மதக்குருக்களினாலும் மக்களுக்குள் கோபமும், லோபமும் அதிகம் உண்டாகி பொதுஜன க்ஷேமத்திற்கும் பங்கம் ஏற்பட்டு நாடு சீர்கேடான நிலைமையிலிருக்கிற தற்காலத்தில் மதஸ் தாபனங்களுக்கோ, மத குருக்கள் மடங்களுக்கோ, இனி மேலாகிலும், ஒரு விதமான ஆதரவும் காட்டக் கூடாது என்ற பொதுஜன அபிப்பிராயம் அதிகமாய் இருக்கிற நிலைமையில் சனாதன மத மாகிய இந்துமத குரு ஆச்சாரியர்களான சங்கராசசாரி பேன்ற மத குருமார்களுக்கு சென்னை நகரில் மடங்கட்டு வதற்கு சர்க்காரிலோ, கார்பரேஷனிலோ, யாதொரு விதமான உதவியும் இடமும், வசதியும் கண்டிப்பாய் கொடுக்கக் கூடாது என்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

பிரரேபித்தவர்:— தோழர் டி. என் இராமு.

ஆமோதித்தவர்:— தோழர் எஸ். வி. லிங்கம்.

இத் தீர்மானமும் ஏகமானதாக ஒப்புக் கொள்ளப் பெற்றது.

தோழர்கள் பஞ்சசீலம் விசாகம் ஆகிய இருபெண்மணிகளும் "மாதர்கள் முன்னேற்றம்" "பெண்கள் அடிமை" என்பதுபற்றி மிகஅழகாகவும் விரிவாகவும் விளக்கமாகவும் உணர்ச்சி ததும்பப்பேசினார்கள்.

மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை யொட்டிப்பேசும்பொழுது சுயமரியாதை தோழர்கள் தேசியப்புரட்டு, காந்தியின் வர்ணாச்சிரமப்பித்தலாட்டம். சங்கராச்சாரியின் சூட்சிக் குசாவுமணி, தேசீயப்பத்திரிகைக

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க,

## ஈரோடு பெண் பாடசாலையில் பெற்றோர்கள் தினம்.

ஈரோடு கவர்ன்மெண்ட் பெண்கள் பாடசாலையின் பெற்றோர்கள் தின விழாவானது ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் சரஸ்வதி ஹாலில் தோழர் இ. எஸ். கணபதிஅய்யரவர்கள் தலைமையில் கொண்டாடப் பட்டது கொண்டாட்டத்திற்கு பெரியவர்களும் குழந்தைகளுமாக சுமார் 1000 பேருக்கு மேலாகவே கூடி இருந்தார்கள். பெண்கள் அதிகமாகக் காணப்பட்டார்கள்.

விழாவானது கும்மி, கோலாட்டம் சிறு விளையாட்டு முதலியவைகளுடன் நடந்த தென்றாலும் அவற்றுள் சாவித்திரி சத்தியவான் என்கின்ற ஒரு புராணக்கதையைநாடகரூபமாக நடத்திக் காட்டப் பட்டதானது மிகவும் குறிப்பிடத்தக்கதாய் இருந்தது. நாடக பாத்திரங்கள் எல்லாம் சுமார் 10 வயது முதல் 16 வயதுக்குள் பட்ட அப்பள்ளிக்கூட மாணவப் பெண்களாகவே இருந்தார்கள். நாடகமானது கூடியவரை மிகவும் அருமையாக நடித்துக் காட்டப்பட்டது. இம்மாதிரியாக ஒரு நாடகம் நடித்துக் காட்ட அம்மாணவிகளை தர்ப்பித்து செய்த பெண் பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயரும், மற்றும் உதவி உபாத்தியாயர்களும் பாராட்டப் படத்தக்கவர்களே ஆவார்கள். மாணவர்களுடைய அறிவும் சுபாவ ஞானமும் சிலாகிக்கத் தக்கவையாகும் ஆனால் ஒரு விஷயம் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அதாவது இவர்கள் நடித்துக் காட்ட எடுத்துக் கொண்ட புராணக்கதையின் முட்டாள் தனத்தையும், மூட நம்பிக்கையையும் குருட்டு பக்தியையும் வெளிப்படுத்தாமலும்அறிவு வளர்ச்சிக்காகபடிப்பிக்கப்படும்பெண்களை இவ்விதம் பகுத்தறிவற்ற பிராணிகள் பிராயத்துக்கு ஆளாக்கி வைப்பதைப் பார்த்து வருந்தாமல் இருக்க முடியவில்லை என்பதேயாகும்.

மேற்படி கதையில் ஆரம்ப முதல் கடைசி வரை எந்த இடத்திலாவது பகுத்தறிவுக்கு ஒத்த விஷயம் கடுகளவாவது காணப்படுகின்றதாஎன்பதை யோசித்தால் இது யாவருக்கும் எளிதில் விளங்கும். கதைச்சுருக்கமாவது:—

"சாவித்திரி என்கின்றஒரு பெண் நந்தவனத்தில் விளையாடும் போது சத்தியவான் என்கின்ற ஒரு பையன் வெட்டையாடி நந்தவனத்திற்கு வந்து சேர்ந்து பெண்ணைப்பார்த்து மையல் கொள்ளுவது, பெண்ணும் பையனைப் பார்த்து மையல் கொள்ளுவது, பிறகு இருவருக்கும் கல்யாண ஏற்பாடு நடை பெறுவது, அது சமயம் மணமகன் ஒரு வருஷத்தில்செத்துப்போவான் என்றுதெரிவது தெரிந்தும்பெண் அவனையே மணம்செய்துகொள்ள விரும்புவது, பிறகு மணம் நடந்த பின் ஒரு வருஷத்தில் மணமகன் செத்துப் போவது, பிறகு மணமகள் எமன் பின்னால் எமனை விடாமல் தொடர்ந்து திரிந்து எமனை ஏமாற்றி தன் புருஷனை பிழைக்க வைத்து மகிழுவது" என்பதாகும்.

இதற்கு ஆதாரம் அப்பெண்ணின் கற்பு என்று சொல்லி ஆதலால் பெண்கள் எல்லோரும் கற்பாயிருக்க வேண்டு மென்றகருத்தைக் கொண்டுகதையை முடிப்பது.

இக்கதை ஆரம்பமுதல் அந்தம் வரை எந்த இடத்திலாவது பகுத்தறிவுக்கு ஒத்த விஷயம் இருக்கின்றதா? அல்லது இன்றைய அனுபவத்திற்கு ஒத்த விஷயங்கள் இருக்கின்றனவா? என்பதை இதில் யோசிக்கத்தக்கதாகும்.

இக்கதையில் ஜோசியம் பொய்த்துப்போய் விட்டது. எமன் ஏமாற்றப்பட்டுவிட்டான். கற்பு வெற்றி பெற்றது என்கின்றமூன்று விஷயங்கள் காணப்படுகிறேன். ஜோசியத்தை நாம் நம்புவதில்லை ஆதலால்ஜோசியம் பொய்த்துப்போவதைப்பற்றி நாம்கவலைப்படவில்லை.

எமனையும் நாம் அப்படி ஒன்று இருப்பதாக ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆதலால் அதைப்பற்றியும், அவனது புத்திசாலித்தனத்தைப்பற்றியும் நாம் கவலைப்படுவதில்லை.

கற்பு என்பதாக ஒன்று இருப்பதாகவும் நாம் கருதவில்லை. ஆதலால் அதைப்பற்றியும் நாம் கவலைப்படவில்லை.

ஆனால் ஒரு விஷயத்தைப்பற்றி மாத்திரம் மக்களுக்கு ஞாபக மூட்டகடமைப்பட்டுள்ளோம். சாவித்திரி கற்புள்ளவளாயிருந்ததால் தன் புருஷன் இறந்து போனவனை பிழைக்க வைத்தாள் என்று சொல்லி மற்றவர்களையும் கற்பாய் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்ற கதைப்படியே அக்கதையை உண்மை என்றே வைத்துக்கொண்டு பார்ப்போமேயானால் இன்று உலகில் அல்லது இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான விதவைகளில் ஒரு குழந்தைவிதவையாவது ஒரு மங்கை விதவையாவது கற்புள்ள விதவையாயிருந்திருக்கமாட்டார்களா? அல்லது ஒரு விதவையாவது தன் புருஷன் இறந்ததைக் குறித்து விசனப்பட்டுத் தனது கற்பை ஈடுகாட்டி அப்புருஷன் பிழைக்கவேண்டுமென்று வருந்தியிருக்க மாட்டார்களா? அந்தப்படி கற்பாய் இருந்து வருந்தி இருந்தால் இறந்த கணவன்களில் ஒருவராவது பிழைத்து இருக்கமாட்டாரா? என்பவற்றை யோசித்தால் இன்று பெண்களில் சிறப்பாகவும், குறிப்பாகவும் விதவைகளில் ஒருவர் கூட கற்புள்ள பெண்மணிகள் இல்லையென்றுதானே அர்த்தமாகின்றது. அல்லது ஒருவரும் இம்மாதிரி முயற்சிக்கவில்லை என்றுதானே அர்த்தமாகிறது. இவை ஒருபுறமிருக்க 3, 4, 5, 7, 10 வயதுகளுக்குள்பட்ட குழந்தைகள் கூட விதவைகளாக ஆகிவிடுகின்றனவே அவைகள் கூடவா கற்பில்லாத பெண்மணிகளாயிருக்கும் என்பதை யோசித்தால் அப்பொழுது பெண்கள் கற்பாயிருக்க முடியவே முடியாது என்பதாகத்தானே எண்ணவேண்டியிருக்கிறது. அல்லது இக்கதை பொய்யும், முட்டாள் தனமும் நிரம்பியது என்றுதானே சொல்லவேண்டும். சாத்தியமேயில்லாத காரியத்தில்—பலனேயில்லாத காரியத்தில் மக்கள் புத்தியை இழுத்துவிடுவதால் லாபமென்ன? என்பதை சிந்தித்துப்பார்க்கவேண்டியது அறிஞர் கடமையாகும்

இக்கதையின் சாரமானது கதையிலுள்ள எமன் என்பவன் ஏமாந்து போய்வரம்கொடுத்துமுட்டாள்பட்டம்கட்டிக்கொண்டதுபோல் பெண்கள் சமூகமும் ஏமாந்து போய் இம்மாதிரியான கதைகளை நடத்தி நிரபராதிகளான பெண் சமூகத்தை—விதவை சமூகத்தை என் இம்மாதிரி குற்றங்களுக்கு ஆளாக்கவேண்டும் என்று ஒருவர் கேள்பதானால் அதற்கு என்ன பதில் சொல்ல முடியும்?

ஆகையால் இனியாவது அருமையான ஞானமுள்ள இளங்குழந்தைகளை மிக்க போதனா சக்தியும் ஊக்கமும் உண்மை உழைப்பில் கவலையும் கொண்ட நமது கவர்ன்மெண்ட் பெண்பாடசாலை உபாத்தியாயர்கள் பகுத்தறிவுக்கு ஒத்ததும்அனுபவத்திற்கு ஏற்றதுமான விஷயங்களில் பாடுபட்டு பிள்ளைகளை முன்னுக்கு கொண்டுவர வேண்டும் என்று ஆசைப் படுகின்றோம்.

பகுத்தறிவிலும் பெண்களது உண்மையான முன்னேற்றத்திலும் கவலை கொண்டவர்கள் இதை எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது.

## காங்கிரசைப்பற்றி "நவசக்தி"

தோழர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்களை ஆசிரியராகக்கொண்ட "நவசக்தி" பத்திரிகை காங்கிரசு ஒத்துழையாமையைப்பற்றி எழுதுவதாவது:—

"ஒத்துழையாமையில் உறுதிகொண்டிருந்த பலர் இப்போது அதன் மாட்டு அயர்ச்சிகொண்டு விட்டனர். சிறையில் இருந்து விடுதலை அடைந்த தலைவர் பலர் ஒத்துழையாமையைக் கைக்கொண்டு மீண்டும் சிறைபுக விரும்புகின்றாரில்லை. ஒத்துழையாமை இயக்கத்தின் கர்த்தாவான காந்தியடிகள் கோயில் நுழைவு மசோதாவை சட்டமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். காந்தியடிகளின் வலது கையாகிய ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் சட்டசபை நுழைவுக்கு குறிப்பாக ஆசி கூறி உள்ளார்.

அவ்வாசியை ஸ்ரீமான் பிரகாசம் அவர்களால் நடத்தப்படும் "சுயராஜ்யா" பத்திரிகை வரவேற்று விட்டது.

இத்தகைய ஒத்துழைப்புக்குறிகளை அரசாங்கம் கூர்ந்து கவனித்துவருவதால் கல்கத்தா காங்கிரஸ் நடை முறையில் குறுக்கிடாதென்றே கூறலாம்.

கல்கத்தா காங்கிரசில் ஒத்துழையாக் கொடி இறக்கி ஒத்துழைப்புக் கொடி ஏறுமென்று எதிர்பார்க்கலாம்.

புது சீர்திருத்தம் வரும் சமயத்தில் காங்கிரஸ் ஒத்துழையாமையில் இருப்பது தவறு என்பது காங்கிரஸ் அரசியல் வாதிகளுக்கிடையில் உலவிவருவதை அறிந்து காங்கிரஸ் தொண்டர்களில் சிலர் எரிவு கொள்ளுகிறார்கள். தொண்டர்கள் எரிவுக்கு சிற்சில காரணங்களிருக்கலாம்" என்ற குறிப்புகள் இருக்கின்றன.

## கற்றவர் என்பதற்கு அடையாளம்.

எம். இரத்தினசாமி சி. ஐ. ஈ.

பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் ஒரு அங்கத்தவராய் உள்ள தோழர் எம். ரத்தினசாமி சி. ஐ. ஈ. அவர்கள் கும்பகோணத்தில் ஒரு கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் படித்தவன் என்பதற்கு என்ன அடையாளம்? என்று பேசுகையில் கூறியதாவது:—

"ஒருவன் படித்தவன் என்றால் சில அறிகுறிகள் உண்டு. தன் தேசத்தையே பிரதானமாகக் கருதி மற்றவைகளை மறப்பது கல்விக்கு அழகல்ல.

உலக க்ஷேமத்தை கருதக் கூடிய நோக்கங்கள் இருக்கவேண்டும். தன் பாஷை நாகரீகம் ஆகியவைகளை பிறர்மீது ஏற்புறுத்த நினைப்பது அத்தேசத்தை கூீனதிசை அடையச் செய்வதாகும்.

தன் நாகரீகமேபெரிது என்று நினைப்பது நாசகாலத்துக்கு அறிகுறி.

தன் தேசமல்லாமல் பிரதேசங்களுக்கும் தொண்டாற்றவேண்டும் என்று பேசியிருக்கிறார். குருட்டு பக்திகொண்ட தேசபக்தர்களுக்கும், தேசியவாதிகளுக்கும் இது ஒரு அறிவுரையாகும்."

குடி அரசு.

ஈரோடு 1933 மார்ச்சுமீ 12-உ

# ஸ்தலஸ்தாபன சுயாட்சிகளின் மோசம்.

—:0:—

I

இன்று இந்தியாவில் சுய ஆட்சியின் பேரால் நடைபெறும் அக்கிரமங்கள்—அயோக்கியத்தனங்கள்—ஒழுக்க ஈனங்கள்—நாணயக் குறைவுகள் ஆகியவைகளில் எல்லாம் தலை சிறந்து விளங்குவது ஸ்தல சுயாட்சி என்று சொல்லப்படும் ஸ்தலஸ்தாபன நிர்வாகங்களேயாகும் என்று வெற்றி முரசுடன் கூறலாம்.

நம்நாட்டு ஸ்தலஸ்தாபன உலகத்தை எடுத்துக்கொண்டோமேயானால் அதன் தலைப்பு முதல் கடைசி வரையில் உள்ள ஒவ்வொரு நிலைமையும் தீவத்திக்கொள்ளை போலவே நடந்து வருகின்றனவே அல்லாமல் மற்றபடி அவை யாருக்காக-யாது காரணத்திற்காக ஏற்பட்டதோ அந்த தத்துவம் சிறிதும் இல்லாததை ஸ்தலஸ்தாபன வாழ்வில் கலந்துள்ள-அநுபவமுள்ள எவரும் சுலபத்தில் அறியலாம்.

மற்றும் இந்தியாவுக்காக கேட்கப்படும் சுயாட்சியும் இந்தியாவுக்காக அளிக்கப்படும் சுயாட்சியும் ஏழை மக்களையும், பாமர மக்களையும் வயாற்ற வதைத்து பணக்காரரும், சோம்பேறிகளும், காலிகளும் வாழ்வதற்கும் கொள்ளை அடிப்பதற்கும் ஏற்றதே ஒழிய வேறல்ல என்பதும் நன்றாய் விளங்கும்.

இன்றைய ஸ்தல சுயாட்சியின் தன்மைகளை ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் ஒருவன் எப்படிப்பட்டவனானாலும் அவன் பணம் செலவு செய்தால் - காலிகளைக் கைவசப்படுத்தி காலித்தனம் செய்தால் யாரும் எப்படிப்பட்டவர்களும் ஸ்தலஸ்தாபனங்களை கைவசப்படுத்திக்கொண்டு, தான் செலவிட்ட பணத்தையும் வட்டியுடன் எடுத்துக்கொண்டு தனக்கு உதவி செய்த காலிகளுக்கும் தாராளமாய் அனுகூலம் செய்து விட்டு மேல் கொண்டும் புதையல் எடுப்பது போல் பணமும் செல்வாக்கும் சம்பாதித்துக் கொள்ளுவதற்கு ஏற்ற ஆட்சி, அல்லது ஸ்தாபனம் என்றுதான் சொல்லவேண்டும்.

ஸ்தல சுயாட்சியின் நிர்வாகம் என்பதற்கு கொள்ளை அல்லது காலித்தனம் என்றுதான் இனி பதிப்பிக்கப்படும் அகராதியில் அருத்தம் எழுத வேண்டியதுமாகும்.

நிற்க, அரசாங்கத்தாரே இந்த இலாக்கா முழுவதையும் தங்கள் கையில் வைத்தும் ஸ்தலஸ்தாபனங்கள் முழுவதும் ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களுடைய ஆதிக்கமே இல்லாமல் தாங்களே ஏகபோகமாய் நடத்திவந்தருமான ஒரு காலத்தை எடுத்துக்கொண்டு அந்தக்கால நிர்வாகத்தையும் இன்றைய நிர்வாகத்தையும் ஒப்பிட்டுப்பார்ப்போமேயானால் இனி வரப்போகும் சுயராஜ்ய போக்கு எப்படியிருக்குமென்பதையும் ஒருவாறு இப்போதே நிர்ணயம் செய்து விடலாம்.

முதலாவது ஒற்றுமையாய் சகோதரபாவமாய், கட்டுப்பாடாயிருக்கின்ற ஒரு ஊருக்குள் ஸ்தல சுயாட்சி என்கின்ற "பிசாசு" போய் புகுந்த மாத்திரத்தில் வேற்றுமை, கட்சிப் பிரதிகட்சி, கலகம், காலித்தனம், அடிதடி, கொலை வரையில் நடைபெறவழி திறக்கப்பட்டுவிடுகின்றது. பிறகு எவ்வளவு போக்கியனானாலும் அதில் பிரவேசித்தால் அயோக்கியன் ஆய்த்தீரவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகின்றதுடன் அநாவசியமாய் ஒருவருக்கொருவர் வர்மம் ஏற்பட இடமுண்டாகின்றது.

மேல்கண்ட இந்தக் காரியங்கள் எல்லாம் நாணயமாய் நடைபெறும் ஸ்தல ஸ்தாபன சுயாட்சிகளிலேயே காணக் கூடியதாய் இருக்கின்றன என்றால் இனி நாணயக்குறைவாய் நடைபெறும் ஸ்தலஸ்தாபன சுயாட்சிகள் என்பவைகளில் என்ன நடைபெறும் என்பதை எடுத்துக் காட்ட வேண்டுமா என்று கேள்கிறோம்.

தேர்தல்கள் என்னும் தலைப்பை எடுத்துக் கொண்டால் ஒரு முனிசிபல் ஓட்டருடைய ஓட்டு 100 ரூ. வீதமும் ஒரு தாலூகா போர்டு மெம்பருடைய ஓட்டு 5000 ரூ. வீதமும், ஒரு ஜில்லா போர்டு மெம்பருடைய ஓட்டு 10000 பத்தாயிரம் ரூபாய் வீதமும் வாங்கி தேர்தல் காலத்தில் வெற்றி பெறும் விஷயங்கள் நமக்கு நன்றாய் தெரியும்.

ஒரு முனிசிபல் கவுன்சிலர் எலக்ஷனுக்கு பத்தாயிரம் ரூபாயும், ஒரு தாலூகா போர்டு வைஸ்சேர்மன் எலக்ஷனுக்கு 20000 இருபது ஆயிரம் ரூபாயும், ஒரு ஜில்லா போர்டு மெம்பர் எலக்ஷனுக்கு இருபது ஆயிரம் 20000 ரூபாயும் ஒரு ஜில்லாபோர்டு பிரசிடெண்ட் எலக்ஷனுக்கு ஒரு லட்சத்திபதினாலு 114000 ஆயிரம் ரூபாயும், செலவு செய்து வெற்றிபெற்ற தேர்தல்களும் நமக்குத் தெரியும். நமக்குமாத்திரமல்லாமல் சர்க்காருக்கும் இந்த விஷயங்கள் தெரியும் என்றுகூடச் சொல்லலாம். சில இடங்களின் தேர்தல்களில் எதிர் அபேட்சகர்கள் கொலை செய்யப்பட்டதும் ஓட்டர்கள் கொலை செய்யப்பட்டதும், கட்சி உதவியாளர் கொலை செய்யப்பட்டதும் நமக்குத் தெரியும். தேர்தலில் நின்று விட்டால் அபேட்சகர்கள் எதிர் அபேட்சகர்களுக்கு பயந்து ரிவால்வரும் கையுமாய் தூக்கமில்லாமல் திரிவதும் நமக்குத்தெரியும்.

தேர்தல் தலைப்பை விட்டுவிட்டு தேர்தல் முடிவு தலைப்பை எடுத்துக்கொண்டால் அது ஒரு பெரிய அத்தியாயமாகவே காணப்படும். எலக்ஷன் முடிவைப்பற்றிய விவகாரங்கள் பத்து பன்னிரண்டு வருஷத்துக்கு முன்பு கலக்டர்களுக்கு இருந்தபோது அவை ஒழுங்காய் நடைபெறவில்லை என்று புகார்கள் ஏற்பட்டு கோர்ட்டுகளின் அதிகாரத்துக்கு விட்டதில் அது வக்கீல்களுக்கு ஒரு புதிய லாபமாய் ஏற்பட்டதோடு கட்சிக்காரர்களுக்கு 15 நாளில் முடிவு பெறும் விஷயம் மூன்று வருஷம் இழுக்கப்பட்டு முன்னிலும் அதிகமான கஷ்டமும் செலவும் ஏற்பட்டதல்லாமல் ஒரு வழியிலாவது அனுகூலம் ஏற்பட்டதென்று சொல்லுவதற்கில்லாமல் போய்விட்டது. எலக்ஷன்கள், ஸ்தலஸ்தாபன தலைவர்கள் நடத்துவதில் ஏற்பட்ட அக்கிரமங்களை தடுப்பதற்காக எலக்ஷன் நடத்தும் வேலைகளை தனி அதிகாரிகளிடமும், ரிவினியூ அதிகாரிகளிடமும் விட்டபிறகு அவர்களுக்கு இது ஒரு புதிய வரும்படிக்கு இடமாக ஏற்பட்டதே ஒழிய அது சம்பந்தமான குற்றங்கள் குறைந்ததாக சொல்லுவதற்கில்லை. ஏனெனில் கணக்கு வழக்கில்லாத எலக்ஷன் தகராறு விவகாரங்கள் கோர்ட்டுகளில் நடந்தவண்ணமாகவே இருக்கின்றன. கோர்ட்டு முடிவுகளோ பெரும்பாலும் பிராதுக்காரனுக்கு பயன்படாமல் அபேட்சகரின் உத்தேசம் நிறைவேறாமல் போனபின்பே முடிவு செய்யப்படுகின்றன.

வியாபார முறையிலும், அதிகார தாட்சண்ணிய முறையிலுமே ஓட்டுகள் உபயோகப்படுத்த சௌகரியமேற்பட்டு விட்டபடியால் ஓட்டுகள் வெளிப்படையாகவே பதிவாகவும், எலக்ஷன் ஸ்தலத்திலேயே ரொக்கவிலைக்கே விற்கவுமான அவசியமும், சௌகரியமும் ஏற்பட்டுவிட்டது.

இனி நிர்வாக முறையை எடுத்துக்கொண்டோமேயானால் அது இவை எதற்கும் இளைத்ததல்ல என்றுதான் சொல்லவேண்டும். நிர்வாகங்கள் பெரிதும் ஸ்தலஸ்தாபன தலைவர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் சொந்த குடும்பச் சொத்துக்கள் போலவே பாவிக்கப்பட்டு சகோதரர்கள் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வது போலவே அதன் சொத்துக்களை பங்கிட்டுக்கொள்வது வெளிப்படையான — எல்லோராலும் ஒப்புக்கொள்ளத்தக்கதான காரியமாய் இருந்து வருகின்றது. ஏனெனில் அந்த ஸ்தானங்களை அடைய அவரவர்கள் பட்டபாடுகளையும், பணங்கள் செலவழித்ததையும் தெரிந்தவர்களுக்கு இது சரியென்றே தோன்றிவிடுகிறது. ஓட்டர்களும் இந்தமாதிரியான காரியங்களைப்பற்றி குற்றம் சொல்லவோ, நினைக்கவோ அருகதையற்றவர்களாகவே இருக்கிறார்கள். ஏனெனில் ஒருவன் முனிசிபாலிடியில் 10 ரூ கொடுத்து தன்னை ஒரு ஓட்டராக பதிவு செய்து கொண்டால் 2-ரூபாய் முதல் 5-ரூபாய் 10-ரூபாய் வீதம் பணம் வாங்கிக்கொண்டு ஓட்டு போடலாம் என்கின்ற தைரியம் ஒவ்வொரு ஓட்டருக்கும் ஏற்பட்டு விட்டது. 500, 1000, 2000, ரூ. செலவு செய்து கௌன்சிலராகவோ, மெம்பராகவோ ஆகிவிட்டால் சேர்மென், பிரசிடெண்ட் எலக்ஷன்களில் ஓட்டு செய்வதில் அசலுக்கு மேல் 500, 1000 லாபம் சம்பாதித்துவிடலாம் என்கின்ற தைரியம் ஏற்பட்டு விட்டது. இதுமாத்திரமல்லாமல் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுக்கலாம் என்றும் கன்ட்ராக்ட்டுகள் எடுத்து லாபம் சம்பாதித்துக்கொள்ளலாம் என்றும் ஆசை ஏற்பட்டு விடுகின்றது.

சில போர்டுகளிலும், கௌன்சில்களிலும் பகுதிகன்ட்ராக்ட்டு தலைவருக்கும், பகுதியில் மூன்றில் ஒருபாகம் மெம்

பிரசிடெண்டுக்கும், மீதி மூன்றில் இரண்டு பாகம் மெம்பர், கௌன்சிலர்களுக்கும் என்று பங்குபிரித்துக்கொள்ளப்படுகின்றது.

சில போர்டுகளில் மோட்டார் பஸ் போக்குவரத்து பூராவும் பிரசிடெண்டுக்கும், கன்றாக்டுகள் முழுவதும், வைஸ் பிரசிடெண்டுக்கும் மெம்பர்களுக்கும் என்று பாகம் பிரித்துக்கொள்ளப்படுகின்றது.

இவ்வளவும் தவிர பொய் கணக்கு, பொய் பில், சாமான்களில் கமிஷன் முதலியவைகளிலும் ஏராளமாகக்கொள்ளை அடிக்கப்படுகின்றன.

இவை ஒருபுறமிருக்க நிர்வாகச் செலவுகள் என்பதில் தலைவர்களுக்கும், அங்கத்தினர்களுக்கும் சிறிதும் பொறுப்பு கிடையாது. சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளமோ, "குருட்டுக்கோமுட்டிக்கடையில் அள்ளாதவன்பாவி" என்றொரு பழமொழி உண்டு. அதுபோல் உலகத்தில் உபயோகமற்ற பிராணிகளுக்கும் வேறு எந்த வழியிலும் பிழைக்க முடியா ஜீவன்களுக்கும் முனிசிபாலிட்டியும், தாலூக்கா ஜில்லா போர்டுகளும் தான் தர்ம சத்திரங்கள் போலும் பஞ்சராப்போல் போலும் இருந்து வருகின்றன. பி. ஏ., எம். ஏ., படித்து பாஸ் செய்து விட்டு 25 ரூ. சம்பளத்துக்கு ஆயிரக்கணக்கான மக்கள் திண்டாடுகின்ற இந்தக்காலத்தில்- எஸ். எஸ். எல். சி. படித்துவிட்டு மாதம் 10 ரூபாய் சம்பளத்துக்கு திண்டாடுகின்ற இந்தக்காலத்தில்- ரூபாய் ஒன்றுக்கு பட்டணம்படியால் 8 படி அரிசி விற்கின்ற இந்தக்காலத்தில் ஸ்தலஸ்தாபனங்களிலுள்ள சம்பளக்கொள்ளைகள் நினைத்தால் உண்மையான உள்ளமுள்ளவர்களுக்கு நெஞ்சம் பதராமல் இருக்கவே முடியாது. இதைப்பற்றி மற்றொரு சமயம்குறிப்பிடுவோம்.

சம்பளக்கொள்ளை ஒருபுறமிருக்க ஸ்தலஸ்தாபன தலைவர்களுக்கு வேண்டியவர்களுக்கும் அங்கத்தினர்களுக்குவேண்டியவர்களுக்கும் தங்கள் தேர்தல்களில் உதவி செய்தவர்களுக்கும் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கும் உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டுமே என்பதற்காக பழைய உத்தியோகஸ்தர்களை வெளியே அனுப்புவதும் புதிய புதிய உத்தியோகங்களை அனாவசியமாய் உற்பத்தி செய்வதும் அவர்களுக்கு அளவுக்கும் தகுதிக்கும் மீறின சம்பளங்களை ஏற்படுத்திக் கொடுத்து வருவதுமான அக்கிரமமும் கொள்ளையும் இன்று எந்த ஸ்தலஸ்தாபனத்திலாவது இல்லை என்று சொல்ல முடியாது.

ஆகவே இன்றைய ஸ்தலஸ்தாபனங்களில் எந்தவிதமான கொள்ளை, நாணயக்குறைவு, அயோக்கியத்தனம் பொறுப்பற்ற தன்மை முதலிய கொடுமைகள் இல்லை என்று சொல்லக்கூடுமா?

இந்தக் காரணங்களாலேயே ஸ்தலஸ்தாபனங்களுக்கு புதிய புதிய உரிமைகள் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுவது ஒருபுறமிருந்தாலும் ஸ்தலஸ்தாபனத்தலைவருக்கும் அங்கத்தினர்களுக்கும் இருந்த அதிகாரங்கள் இந்த 15 வருஷ காலமாக சிறிது சிறிதாக பறிமுதல் செய்துகொண்டே வரப்படுகிறது என்பதையும் அந்தப்படி இன்னும் பறிமுதல் செய்யவே பொது ஜனங்கள் விரும்புகின்றார்கள் என்பதையும் யாவரும் மறுக்க முடியாது. இப்பொழுது சமீபத்தில் சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஜில்லா முனிசிபாலிட்டி திருத்த சட்டப்படி முனிசிபாலிட்டிகளுக்கு ஸ்பெஷல் ஆபீசர் அல்லது நிர்வாக உத்தியோகஸ்தர்களை நியமித்து அவர் வசம் சிப்பந்திகள் நியமனம் கன்றாக்ட்டு வினியோகம் முதலிய நிர்வாக காரியங்களை ஒப்புவித்து விடுவது என்பதாக ஏற்பாடாயிருக்கின்றது. அந்த ஏற்பாட்டை ஒரு முனிசிபாலிட்டி கூட பாக்கியில்லாமல் சீக்கிரம் அமுலுக்குக்கொண்டுவரப்பட்டு விடுமானால் ஒரு அளவுக்கு முனிசிபல் நிருவாகம் யோக்கியமுடையதாகலாம் என்பதே நமதபிப்பிராயம். சில முனிசிபாலிட்டியின் தலைவர்களும் அங்கத்தினர்களும் பணம் காசு விஷயத்தில் நாணயமாயிருக்கலாம் என்றாலும் அவர்களும்-உத்தியோகவினியோகம், கன்றாக்ட்டு வினியோகம் ஆகிய காரியங்களில் சொந்தத்தில் பயனடையாவிட்டாலும் முனிசிபாலிடிக்கு நஷ்டமில்லாமல் செய்ய முடிகின்றதா என்பதும் இதன் பயனாய் அங்கத்தினர்களுக்கும் தலைவர்களுக்கும் அபிப்பிராய பேதமோ அதிருப்தியோ கட்சியோ ஏற்படுவதற்கு இடமில்லாமல் இருக்கின்றதா என்பது சந்தேகமேயாகும்.

ஆதலால் நல்லநிர்வாகம் என்று வெகு ஜனங்களாலும் சர்க்காராலும் பெயர் வாங்கினதும் தலைவர்கள் அங்கத்தினர்கள் ஆகியவர்களின் மீது நாணய விஷயத்தில் சிறிதும் சந்தேகப்படுவதற்கு இடமில்லாமலிருக்கின்றதென்று சொல்லிக்கொள்ளப்படுவதுமான ஈரோடு, கோயமுத்தூர் முதலிய முனிசிபாலிடிகளுக்கு அந்த முனிசிபாலிடியின் வேண்டுகோளின்மீதே ஸ்பெஷல் ஆபீசர் அல்லது எக்சிகூட்டிவ் ஆபீசர் என்பவர் நியமிக்கப்படுமானால் அது மற்ற முனிசிபாலிடிகளுக்கு வழிகாட்டியாக இருக்க முடியும் என்பதோடு ஸ்தலஸ்தாபன நிர்வாகம் ஒரு அளவுக்காவது யோக்கியமுடையதாகச் செய்ய கூடியதாகவும் இருக்கும்.

இனி இதுபோலவே லோகல் போர்டு, ஜில்லா போர்டுகளுக்கும் இம்மாதிரியாக ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்க சென்னை ஸ்தலஸ்தாபன மந்திரி உடனே ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கோருகிறோம்.

ஏனெனில் 10 முனிசிபாலிடிகளில் நடக்கும் அக்கிரமங்களும், நஷ்டங்களும், மற்ற ஒழுக்கமற்ற காரியங்களும் ஒரு ஜில்லா போர்டில் நடப்பதற்கு சமானமாகும்படி ஜில்லா போர்டுகளில் அவ்வளவு பெரிது கைகள் கையாளப்படுகின்றன. முனிசிபாலிட்டியில் ஆயிரக்கணக்காக பணங்கள் கொள்ளை போகும் என்றால் ஜில்லா போர்டில் பதினாயிரக்கணக்காக லக்ஷக்கணக்காக கொள்ளை போக இடமிருக்கிறது. சிலதுகளில் போய்க் கொண்டும் இருக்கின்றன.

இன்றைய ஜில்லாபோர்டு தலைமை ஸ்தானங்களும், அங்கத்தினர்கள் ஸ்தானங்களும் 100-க்கு 90-ஸ்தானங்கள் ராஜாக்கள், ஜமீன்தார்கள், பெரிய பெரிய நிலச்சுவான்தாரர்கள் பெருத்த வியாபாரிகள் என்று சொல்லத்தகுந்த வன்னெஞ்சக்கொடுமையாளர்கள் கொள்ளைக்கூட்டத்தலைவர்கள் என்கின்றவர்கள் கையிலேயே சிக்குண்டு கிடக்கின்றன. அவர்கள் அந்த ஸ்தானங்களை அடைய நாம் முன்கூறியபடி 10000, 20000, 50000, 100000 ரூபாய்கள் வீதம் செலவு செய்து அடைந்திருக்கிறார்கள். அந்த செலவை வட்டியுடன் அடைய எதிர்பார்க்காதவர்கள் மிகச்சிலர் தான் இருக்கமுடியும் இவர்கள் இப்படிக்கொள்ளை அடிக்க ஆரம்பித்து மற்றும் மேற்சொல்லப்பட்ட காரியங்களும் நடைபெறுமானால் கஷ்டப்பட்டு பாடுபடும் பொது மக்களுக்குத்தான் நஷ்டமும், கஷ்டமும் வசதிக் குறைவும் ஏற்படும். ஆதலால் இன்றைய அரசாங்கம் உண்மையாகவே பொது ஜனங்களுடைய பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுமானால் அது உடனே இந்தக்காரியத்தை அதாவது எல்லா முனிசிபாலிட்டிகளுக்கும் எல்லா தாலூகா ஜில்லாபோர்டுகளுக்கும் ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்க ஏற்பாடு செய்து அந்தப்படி நியமித்துவிட்டுவேறு காரியம் பார்க்கவேண்டுமென்று விரும்புகின்றோம். மற்றபடி மாதிரிகளைப்பற்றியும் சட்டசபை அங்கத்தினர்களைப்பற்றியும் அந்த நிர்வாகம் தேர்தல் ஆகியவைகளைப்பற்றியும் மற்றொரு சமயம் எழுதுவோம்.

---

## தோழர் செங்கோட்டையா.

திருவாரூரில் 12-3-33-ந் தேதி நடைபெறும் 4-வது செங்குந்த மகாநாட்டின் சார்பாய் நடந்த வியாபாரிகள் மகாநாட்டில் தலைமை வகித்த கோவை பிரபல வியாபாரியான தோழர் வி. எஸ். செங்கோட்டையா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவை முதலாளிமார்கள் என்பவர்கள் கவனித்துப்பார்க்கவேண்டியதாகும். அதில் சிற்சில இடங்களில் புராணக்காலட்சேபங்கள் இருந்தனவானாலும் முதலாளிமார்களும் பணம் படைத்தவர்கள் என்பவர்களும் தொழிலாளிகளிடமும், ஏழை மக்களிடமும் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் பணத்தைக்கொண்டு எந்த மாதிரியான பொது நன்மை காரியங்கள் செய்யவேண்டும் என்பதையும் கூடியவரையில் நன்றாகவே விளக்கியிருக்கிறார்.

அந்தப்படி நடந்து வந்தாலொழிய இனிவரும் காலத்தில் செல்வவான்களுக்கும், முதலாளிமார்களுக்கும் சுயமரியாதை உலகத்திலும், சாந்தி உலகத்திலும் இடம் கிடைப்பதரிது என்பதை தோழர் செங்கோட்டையா அவர்கள் ஓரளவுக்கு உணர்ந்திருப்பதை நாம் பாராட்டுகின்றோம்.

---

## தோழர் சர். பி. சி. ரே.

தோழர் சர். பி. சி. ரே. அவர்கள் டில்லியில் ஒரு பெரும் மாணவர் கூட்டத்தில் பேசும்போது "நான் சர்வாதிகாரியாய் இருந்தால் இந்நாட்டு சர்வகலாசாலைகளையும், சட்ட கல்லூரிகளையும் இடித்துத் தரைமட்டமாக்கிவிடுவேன்" என்று கூறினார். எதற்காக இப்படிச் சொல்கிறார் என்றால் இப்படிப்புகளால் நமது அருமை மக்கள் வாடி வதங்குவதாகவும் மக்களின் மூளைகள் பாழாகி இயற்கை ஆற்றல் வீணாகிவிடு

கின்றதென்றும் விஞ்ஞான சாஸ்திரத்திலும், இந்திய கைத்தொழிலும் மூளையைச்செலுத்தி வேலையில்லாத திண்டாட்டத்தை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவும் சொல்கிறோம்.

இது நல்ல யோசனைதான். இப்போதைய கலாசாலைகளும், குறிப்பாக சட்ட கலாசாலையும் மக்களுக்குக்கெடுதியை உண்டாக்குவதுடன் அவைகளில் பயின்றவர்கள் சோம்பேரிவாழ்க்கைப் பிரியர்களாகி ஏழைகளின் உழைப்பில் வாழுகின்றவர்களாகவுமாகி உலக நன்மைக்கே விரோதிகளாகவும் பூண்டற அழிக்கப்பட வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை இப்படிப்பட்ட அற்புத ஞானமுள்ள இவர் மாடமாளிகைகூடகோபுரங்களில் வாழும் செல்வவான்களையும், முதலாளிமார்களையும்பற்றி ஒன்றும் பேசாமல் விட்டுவிட்டு ஏழை மக்களைப்பார்த்து "உங்களுக்குகை இராட்டினம்தான் சொர்க்கலோகம் அதுவேதான் பரமபதம் ஆகையால் கைராட்டினத்தைச்சுற்றிக்கொண்டே ஆரை வயிறுக்கும் போராத கூலியாகிற தினம் ஒரு அணாவைக்கொண்டு உயிர்வாழுங்கள்" என்று சொல்லுகின்றாரே; தோழர் ரே அதன் இரகசியம் தான்நமக்கு புரியவில்லை.

## எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்.

தோழர் எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் என்பவர் சென்னை காங்கிரசில் வெகுநாள் இருந்தவர். சிறைக்கும் சென்று வந்தவர். காந்தியார் தீண்டாமை விலக்குக்காக சர்க்கார் தயவை நாடியவுடன் பார்ப்பனியத்திற்கு ஆபத்து வந்து விடுமே என்று கருதி திடீரென்று காந்தியார் மீது பாய ஆரம்பித்து விட்டார். இது தோழர் சுப்பிரமணிய அய்யர் அபிப்பிராயம் என்று கருதுவது தப்பாகும். தேசியப் பார்ப்பனர்கள் எல்லோருடைய அபிப்பிராயமும் இதுவேயாகும். தோழர் அய்யர் ஒரு கூட்டத்தில் பேசியதாக "தமிழ் நாடு" பத்திரிகையில் காணப்படும் வாக்கியங்களாவன.

"காந்தி இப்போதுசெய்யும்சீர்திருத்தமானது ஜனங்களுக்குள் சண்டை சச்சரவுகளை உண்டாக்கும். ஆதி இந்துக்களுக்கு ஆலய தரிசனம் கொடாவிட்டால் இந்து மதத்திற்கு ஆபத்து என்று காந்தி சொல்லுவது தப்பு. ஆலய தரிசனம் கொடுப்பது தான் இந்து மதத்திற்கு ஆபத்து. காந்தி எல்லோரையும் கதர் கட்டும் படி சொன்னாரே, யார் கட்டுகிறார்கள்"

## காரைக்குடியில் போலீஸ் ஆட்சி.

3—3—33ந்தேதியில் காரைக்குடியில் தீண்டாமை விலக்கு விஷயமாய் ஏற்பாடுசெய்திருந்த கூட்டத்தில் பேசிய தோழர்கள் ப. ஜீவானந்தம், கணபதி, முத்துப்பட்டனம் ராம. சுப்பையா ஆகியவர்களை போலீசார் அடித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் நியூ சென்ஸ் சார்ஜ் செய்திருக்கிறார்கள்.

(ஒரு நிருபர்.)

## கண்டனத் தீர்மானம்.

4—3—33-ந்தேதி 6-30-மணிக்கு மகார் நோம்புப்பொட்டலில் தேவகோட்டை அட்வகேட்டும் காரைக்குடி தீண்டாமை விலக்குக்கமிட்டி த்தலைவருமான ஏ. ஆரங்கசாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம்கூடியது. தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் 3-3-33 ந்தேதி நடந்த நிகழ்ச்சியைப்பற்றி அறிவித்த பின்னர் கீழ்கண்ட தீர்மானங்களை தலைவர் பிரேரேபித்தார். தோழர்கள் "குமரன்" ஆசிரியர் எஸ். முருகப்பா அட்வகேட் எஸ். இலக்குமிரதன்பாரதி எம். ஏ., பி. எல்., இ. சிவம் முதலியோர் தீண்டாமை விலக்கின் அவசியத்தைப்பற்றியும், போலீசாரின் அனாவசியமான அக்கிரம செயல்களைப்பற்றியும், பேசினார்கள் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்

1. காரைக்குடி ஜில்லா தீண்டாமைவிலக்குக்கமிட்டியின் ஆதரவின் கீழ் கூட்டப்பட்ட காரைக்குடி மகாஜனங்களடங்கிய இந்தப் பொதுக்கூட்டம் மேற்படி கமிட்டியின் ஆதரவின் கீழ் முத்துப்பட்டணத்தில் நடந்த 3-3-33-ந்தேதி கூட்டத்தைக் காரைக்குடி போலீசார் பலாத்காரத்தை உபயோகித்துக் கலைத்து அதில் பேசினவர்களில் ஒருவரான ப. ஜீவானந்தம் அவர்களை அடித்ததற்காகப்போலீசாரின் நடத்தையைக்கண்டிக்கின்றது.

2. இந்தப் பொதுக்கூட்டம் ஷை 3-3-33-ந்தேதி கூட்டம் நடந்த இடத்திற்கு வெகு தூரத்தில் காரைக்குடி போலீசார் ஷை கமிட்டியின் அங்கத்தினர்களில் ஒருவரான ராம சுப்பையா அவர்களையும், காரியதரிசியான என். எஸ். கணபதி அவர்களையும் பிடித்து அடித்து, வைது, அவமானப்படுத்தி காரில் ஏற்றி ஸ்டேஷனுக்குக்கொண்டுபோய் அங்கும் அவமானப்படுத்தியதற்காககாரைக்குடிப்போலீசைக்கண்டிக்கிறது.

3. இந்தப் பொதுக்கூட்டம் ஷை விஷயத்தில் எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை காரைக்குடி ஜில்லா தீண்டாமை விலக்குக்கமிட்டியைய செய்யும்படி கேட்டுக்கொள்கிறது.

---

என்று பேசி இருக்கிறோம். தேசியப் பார்ப்பனர்களின் உண்மையான யோக்கியதையைப் பார்க்க இது ஒரு உதாரணமாகும்.

## தஞ்சை ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாடு, நாகபட்டினம்.

அறிக்கை நெ. 2.

தலைவர் தோழர் K. முத்துசாமிவல்லத்தரசு B. A., B. L., M. L. C.,

ஆரம்பவிழாஆற்றுபவர் தோழர் நீலாவதி ராமசுப்ரமணியம்

வரவேற்பு கழகத்தலைவர், தோழர் ஏ. சிவராமசாமி.

பொதுக்காரியதரிசி, தோழர் டி. பி. ஆறுமுகம்.

கூட்டுக்காரியதரிசிகள், தோழர்கள் ஆர். வி. கோபால், கே. முருகேசன்.

பொக்கிஷதார் தோழர் எம். எஸ். ராஜகோபால.

தொண்டர் படைத்தலைவர் தோழர் எம். ஆர். பதி.

மகாநாட்டைச் சிறப்பாக மார்ச்சு மாத இறுதியில் நடத்தவேலைகள் அதிதீவிரமாக நடைபெற்று வருகின்றன. வெளி ஜில்லாக்களிலிருந்து ஏராளமான தோழர்கள் எதிர் பார்க்கப்படுகிறார்கள்.

பெண்களுக்கு எவ்வித கட்டணமும் இல்லை.

வரவேற்பு கட்டணம் ரூ 3—0—0
பிரதிநிதி கட்டணம் ரூ. 1—0—0
விசிட்டர் கட்டணம் ரூ. 0—4—0

வரவேற்பு கழக அங்கத்தினர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் சாப்பாடு சௌகரியத்தை முன்னிட்டு டிக்கட்டுகளுடன் சாப்பாடு டிக்கட்டும் தனியாகக் கொடுக்கப்படும்.

விளம்பர அதிகாரிகள்

ஏ. கோவிந்தன்,
என். சிவஞானம்,

## இந்திய சட்டசபைத் தலைவர் பதவி.

### ஆர். கே. ஷண்முகத்திற்கு நிச்சயம்.

இந்திய சட்டசபையின் தலைவர் பதவிக்கு தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களே நிச்சயமாகத் தேர்ந்தெடுக்கப்படுவாரெனத்தெரிகிறது.

## சீன ஜப்பான் தகராறு

### கமிட்டியில் சேர ருஷியாமறுப்பு.

சீன ஜப்பான் தகராறையொட்டி பரிசீலனை செய்வதற்காக நியமித்துள்ள 21 பிரதிநிதிகளடங்கிய ஆலோசனைக்கமிட்டியில் கலந்து கொள்ளும் படி சர்வதேச சங்கத்தினர் ருஷியாவை அழைத்திருந்தார்கள். ஆனால் தாங்கள் அக்கமிட்டியில் கலந்து கொள்ள முடியாதென ருஷ்ய சர்க்கார் மறுத்து விட்டனர்.

## திருத்தம்.

சென்ற வாரம் "குடி அரசு" 3ம் பக்கத்தில் 3வது கலத்தில் ராசிபுரம் கூட்டத்தில் தலைமை வகித்தவர் பேளுக்குறிச்சி மிட்டாதார் தோழர்சுப்பராயக்கவுண்டரென்றிருப்பதை வேளுக்குறிச்சி தோழர் சோமசுந்தரக் கவுண்டரென்று திருத்தி வாசிக்க வேண்டுகிறோம். (ப—ர்.)

# சில விளம்பரங்கள்.

(திருமங்கலம்—மணிமாறன்)

கும்பகோணம் மாமாங்கத்தைப் பற்றி சில தோழர்கள் கீழ்கண்டபடி விளம்பரம் செய்ய உத்தேசிக்கிறார்கள்:—

அடா பாபிகளே! ஏன் பாபமூட்டையைச்சுமந்துகொண்டு திரிகிறீர்கள்? என்னிடம் வந்து உங்கள்பாபத்தைபோக்கிக்கொள்ளுங்கள். வருக! வருக!! பாபிகள் திருக்கூட்டமே வருக!!! (புண்ணியவான்கள் வரக்கூடாது) இங்ஙனம்,

தங்கள்,

கும்பகோணம்.

எனக்கு வரும்படி பெரிதல்ல, நீங்கள் புண்ணியம் பெறவேண்டுமென்பதே எனது நோக்கம், வாஸ்தவமாகச்சொல்லுகிறேன். நீங்கள் பாபத்தைப்போக்கிப்புண்ணியவான்களாக வேண்டும், இதனால் எனக்கு என்ன சிரமம் வந்தாலும் பரவாயில்லை? அரைகால் போனாலும் சரி! ஆயிரம் ஆயிரமாய் வரும்படி வந்தாலும சரி! ஒருகை பார்த்து விடுவேன். ஆ! புண்ணியம்! புண்ணியம்!! இங்ஙனம்,

தங்கள்.

ரயில்வே கம்பெனி.

உங்களுக்கு மோக்ஷலோகம் வேண்டுமா? இந்த உலகில் இருந்து அவதிப்படாமல் அந்த மோக்ஷசாம் ராஜ்யத்திற்குப்போக அபேக்ஷையுண்டானால் கும்பகோணத்திற்கு வாருங்கள்! நாங்கள் உங்களை மோக்ஷலோகத்திற்குக் கொண்டுபோகிறோம். இங்ஙனம்,

தங்கள்.

வாந்திபேதி, பிளேக்

நீங்கள் கும்பகோணத்திற்கு வந்து வாந்திபேதியால் மாண்டுபோனால் கருமாதி, சடங்கு, புரோகிதம் செய்ய நாங்களிருக்கிறோம். ஆஸ்திகர்களே! பயப்படாமல் வாருங்கள் இங்ஙனம்,

தங்கள்.

புரோகிததிருக்கோஷ்டி.

ஏ! கும்பகோணம் வரும் பக்தர்களே! வரும்போது கைவசம் காசுவேல கொண்டு வராதீர்கள். கொண்டுவந்தால் பாபம் எங்களுக்குத்துரோகம் செய்த கொடும்பாவத்திற்கு உள்ளாவீர்கள். இங்ஙனம்,

தங்கள்.

கோசுக்கூட்டத்தார்.

எங்களுடைய சாமர்த்தியத்தைக் கும்பகோணத்தில் வந்து பாருங்கள்! கழுத்துச்சங்கிலியை "அபேஸ்" செய்யும் சாமர்த்தியம், உங்கள் ஜேப்பில் உள்ள "மணிபாக்ஸ்" எங்கள்கைக்கு வரும் 'மாஜிக்' இன்னுமா சொல்லவேண்டும்! நேரில் வந்து எங்கள் சாமர்த்தியங்களைக்காணுங்கள்!

இங்ஙனம்,

தங்கள்.

திருடர் சபை

ஏ! வைசிராய் பிரபுவே! வைதீகர்களுக்கு விரோதமாகச் சட்டங்கள் செய்யாதீர் நாங்கள் ஒரு பெரிய கூட்டம் இருக்கிறோம். வேண்டுமானால் கும்பகோணத்திற்கு வந்து பாருங்கள்! உங்களைப்பேட்டி கண்டபின் அந்தத் திட்டைப்போக்குவதற்கு மாமாங்கத்திற்கே போவோம்! இங்ஙனம்,

தங்கள்.

வைதீகர்கள்.

என்னை எல்லோரும் சேர்ந்து ஒழிக்க வேண்டுமென்றுதான், பார்க்கின்றீர்கள்? நானா பயப்படுவன்? என்னுடைய இயக்கத்தைக் கும்பகோணத்தில் பரப்ப உத்தேசிக்கிறேன்

இங்ஙனம்,

தங்கள்.

குஷ்டரோகம்.

வாருங்கள்! வாருங்கள்!! எங்கள் கிளப்பிற்கு விஜயம் செய்யுங்கள்! ஒரு மாதத்திற்கு முன் தயார் செய்த இட்லி! ஊசிப்போனவடை! தண்ணீரில் பால்சேர்ந்தகாப்பி! மணல்கலந்த தோசை! சாப்பிட்டால் உடனே வயிற்றுவலி, வாந்தி வரும் என்பதற்கு கியாரண்டி, செய்கிறோம். இங்ஙனம்,

தங்கள்.

காபிகிளப்.

வடிகட்டி முட்டாள்களாக இருந்தால், அறிவற்ற பித்தர்களாக இருந்தால், மாமாங்கம் பார்க்கப்போவாய்! அறிவுள்ள மனிதனாய், யோக்கியனாய் இருந்தால் "மகாமக" பகிஷ்காரம் செய்வாய்! இங்ஙனம்,

தங்கள்,

சுயமரியாதை இயக்கம்.

# மணமகள் தேவை.

நான் ஒரு ஆதிதிராவிடப்பெண் வயது 22 என்பெயர் சின்னராமாயி. என் ஊர் திண்டுக்கல் தாலுகாவில் வத்திலைத்தோப்பம்பட்டி, கிராமம் கோவில்பட்டி. எனக்கு சுமார் 3-வருஷத்திற்கு முன் சிலுவத்தூரில் என் தாய் மாமனுக்கு கல்யாணம் ஆயிற்று அவருக்கு முதலில் இரண்டு பெண்ஜாதிகள் உண்டு. அவர் 50 வயதானவர் அவரை மணக்க நான் எவ்வளவோ மறுத்தும் பயன்படாமல் போய்விட்டதால் அவருடன்வாழ இஷ்டமில்லாமல் தாய்வீட்டில் வாழ்ந்து வந்தேன். இப்போது என்னை எப்படியாவது எங்கிருந்தாகிலுமாவது வேறுயாருக்காவது ஒரு குழந்தையைப்பெற்றுத் தங்களுக்குக்கொடுத்துவிட்டு பிறகு எப்படியோ போகும்படி தாய்வீட்டாரும் புருஷன வீட்டாரும் சொல்லுகிறார்கள். இதன் மத்தியில் என்னை விபசார முறையில் பெண்டாள பலபேர் பலவித துன்பத்துக்குள்ளாக்கினார்கள், சிலவற்றில் என் வீட்டாரும் உடந்தையாயும் இருந்தார்கள். இவையொன்றுக்கும் இணங்காத நான் இப்போது சுயமரியாதை கொள்கைப்படி வேறு யாரையாவது கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று கருதி யாருக்கும் தெரியாமல் ஈரோட்டிற்கு வந்து தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சுற்றத்தில் வசிக்கிறேன். எனக்கு எழுதப் படிக்கத்தெரியாது. வீட்டுவேலை தோட்டவேலை செய்ய சக்தியும் அனுபவமும் உண்டு, நல்ல நடையும் சுயமரியாதை கொள்கையும் உடைய வாலிபர் ஒருவர் யாராயிருந்தாலும் அவரை வாழ்க்கைத் துணையாகக்கொண்டு வாழ்க்கை நடத்தத்தயாராய் இருக்கிறேன். ஆகையால் என்னை மணக்க இஷ்டமுள்ளவர்கள் உடனே கீழ்கண்ட விலாசத்துக்கு தெரியப்படுத்தும் படி கோருகிறேன். தற்குறி

சின்னராமாயம்மாள்.

விலாசம்:—

சின்னராமாயி,

C/o "குடி அரசு," ஈரோடு.

---

# "ஊழியன்" சம்பந்தமான விபரம்.

காரைக்குடியிலிருந்து வெளியாகிக்கொண்டிருக்கும் "ஊழியன்" பத்திரிகையானது அதன் ஆசிரியா தோழர் ராய சொக்கலிங்கன் அவர்கள் சிறைசென்ற சமயம் அச்சுப் பெயரால் காரைக்குடி "குமரன்" ஆசிரியர் தோழர் முருகப்பா அவர்கள் ஒரு மாதப்பத்திரிகை நடத்தியதாகவும், அதனால் தோழர் ராய சொக்கலிங்கத்துக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகவும், அந்த நஷ்டத்துக்கு ஈடுகொடுக்கவேண்டும் என்றும் தோழர் முருகப்பாவால் நடத்தப்படும் ஊழியன் என்னும் பெயர் கொண்ட மாதப்பத்திரிகை நிறுத்தப்படவேண்டும் என்றும் தோழர் ராய சொக்கலிங்கன் அவர்கள் தோழர் முருகப்பா அவர்கள் மீது தேவகோட்டை முனிசிப் கோர்ட்டில் வியாஜியம் தொடுத்திருக்கிறார். விசாரணை மார்ச்சு மாதம் 17 தேதிக்கு வாய்தா போடப்பட்டிருக்கிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

# துக்கடா.

பார்ப்பனர்கள் மதத்தின் பேரால், ஜாதியின் பேரால், மக்களை கொடுமைப்படுத்தி இழிவுபடுத்துகிறார்கள், பணக்காரர்கள் கடவுள் செயல், தலைவிதி, முன்ஜென்மபலன், சர்க்கார், சட்டம், போலீஸ், ஜெயில், ஆகிய இவைகளின் பேரால் மக்களின் உழைப்பை கொள்ளை அடித்து இம்சித்து வதைக்கிறார்கள். இவர்களில் யார் அயோக்கியர்? எதை ஒழிக்கவேண்டும்?

# தோழர் எஸ். ராமச்சந்திரன் அவர்கட்கு அனுதாபம்.

தோழர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் மரணமடைந்ததை முன்னிட்டு கீழ்கண்ட சங்கங்களில் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள். அவைகள் வருமாறு:—

## திருச்சி.

நகர சுயமரியாதைச்சங்கம்.

திருச்சி நகர சுயமரியாதைச்சங்க ஆதரவில் 7-3-33செவ்வாய்கிழமை மாலை6மணிக்கு இப்ராகிம்பார்க்கில் தோழர் எம். சுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டங்கூடி நம்மை விட்டுப்பிரிந்த நமதாருயிர்த்தோழர் சிவகங்கை எஸ். ராமசந்திரன் பி. ஏ. பி. எல். அவர்களின் பொதுவாழ்க்கை வீரத்தைப்பற்றியும், புகழைப் பற்றியும், தோழர்கள் நா. சு. மு. செல்வக்கணபதி, டி. ராவணதாஸ் முதலியோரால் பேசப்பட்டு நமது தோழர் அவர்கள் இவ்வுலக வாழ்க்கையினின்று மறைந்தது. தமிழகத்திற்கும் சமதர்ம இயக்கத்திற்கும் மகத்தான நஷ்டமாகுமென்று தோழர்கள் யாவரும் வருந்துவதோடு நமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். என்ற முடிவுடன் இரவு 7 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

(ஒரு நிருபர்)

## பட்டுக்கோட்டை.

பனகாலரசர் வாசகசாலை.

பட்டுக்கோட்டை மார்ச்சு 7ந்தேதி செவ்வாய்க்கிழமை இரவு 8-30மணிக்கு வாசக நிலையத்தில் தோழர் எஸ். அருணாசலம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முகவுரையில் சங்கப்புத்தகங்களை அதிகமாக விருத்திசெய்ய யேற்பாடு செய்யவேண்டுமென்றும், கவி ரவீந்தரின் திவ்விய சரித்திரத்தையும் விவேகாநந்தருடைய சரித்திரத்தைப் பற்றியும் வாழ்க்கை நிலையின் மாறுதல்களைப்பற்றியும், விரிவாகக்கூறிய பின் தோழர்கள் ஆர். மாணிக்கம், நடராஜன், வடிவேல், சாமிநாதராவ், முதலியவர்கள் "கல்வியும்கல்வியின் அவசியமு" யென்பது பற்றிப்பேசினார்கள். தோழர் கே. எல். எஸ். கிருஷ்ணன் அவர்கள் "உயர்தரக்கல்வியின் அவசியத்தைப்பற்றிப்பேசிய பின் தெ'ழூர் காதர் அவர்கள்" தொழிற்கல்வியென்பது" பற்றிஓர் நீண்ட உபன்யாசம் நிகழ்த்தினார்.

பனகால் வாசகசாலையின் தலைவர் ஆர். கண்ணையா அவர்கள் பஞ்சாயத்து போர்டுதேர்தலில் வெற்றி பெற்று மெம்பர் பதவி அடைந்ததற்கு இச்சங்கத்திலிருந்து தேனீர்விருந்து அளிப்பது என்றும், சிவகங்கை வக்கீலும், சுயமரியாதை வீரருமான எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். காலஞ்சென்றதற்கு இக்கூட்டம் வருந்துவதுடன்

அன்னார் குடும்பத்தினருக்குத் தினர் அனுதாபம் காட்டுகின்றனரென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு நிருபர்

## வில்லிவாக்கம்.

### சமதர்மசங்கம்.

கொன்னூர் மேலையம்பதி சமதர்ம சங்கத்தின் மாதாந்தரக்கூட்டம் 23-2-33ல் தோழர் ஆர். டி. அய்யாக்கண்ணு தலைமையில் கூடியது. அங்கத்தவர்கள் யாவரும் வந்திருந்தனர் இயக்கத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்குமான பல விஷயங்களைக்குறித்து ஆலோசனைசெய்து முடிவு செய்தபின், இவ்வாரம் 19-2-33ல் வெளியான "குடியரசில்" வந்துள்ள சுயமரியாதை நிர்வாகதிட்டத்தை ஆவலுடன் வரவேற்பதோடு இச்சங்கம் அதனை முழுமனதுடன் ஆமோதிக்கிறது. என்ற தீர்மானத்துடன் கூட்டம் முடிவுற்றது.

சிவகங்கை வக்கீல் தோழர் எஸ். ராமச்சந்திரன் அவர்களின் பிரிவாற்றுமைக்கு வருந்திய அனுதாபக்கூட்டம் 8-3-33ல் கூடப்பெற்றது. அது சமயம் ஒரு அனுதாபதீர்மானம் நிறைவேறியது.

மதுரை அகம்படியர் வாலிபர் சங்கம் செம்பூர் வீ. ஆறுமுகம் சேர்வை ச. பாண்டியன், த. ப. நித்தியானந்தன், முதலியவர்களும் அனுதாபபாட்டுகள் பாடியனுப்பியுள்ளார்கள். மற்ற சங்கங்களிலிருந்து வந்த அனுதாபத் தீர்மானங்கள் அடுத்த வாரம் வெளிவரும். (ப—ர்.)

---

## ஜம்னுதாஸ் துவாரகதாஸ் வெடிகுண்டு.

---

தோழர் ஜம்னுதாஸ் துவாரகதாஸ் பிப்ரவரிமீ 12-தேதி யன்று (தாம் விடுதலை யடையு முன்பு) மகாத்மா காந்திக்கு ஒரு கடிதமெழுதி யிருக்கிறார். அதில் அவர் சட்டமறுப்பு இயக்கத்தின் நியாயத்திலும் உபயோகத்திலும் தமக்குள்ள நம்பிக்கையை ஏன் தாம் இழக்க நேரிட்டதென்பதை விளக்கின்றார்.

தோழர் ஜம்னுதாஸ் துவாரகதாஸ் தாம் புதிய நம்பிக்கையுடன் சட்டமறுப்புஇயக்கத்தில் சேர்ந்தவிதத்தையும் அதற்காக உற்சாகத்துடன் 3 முறை சிறை சென்ற விதத்தையும் எடுத்துரைத்துவிட்டு எழுதுவாதாவது:— இந்த இயக்கமானது உண்மைக்காக பாடுபடாமல் தவறான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றதென்ற முடிவுக்கு வந்திருக்கின்றேன். காங்கிரஸில் சதிகளும் அவ நம்பிக்கையும் அதிகார ஆசையும் இவைபோன்ற இதர அற்பவிஷயங்களு மிருக்கக் காணப்பட்டேன். உங்களை வியர்து பாராட்டுவதாக வெளிக்குப் பாசாங்கு செய்து கொண்டு தாங்கள் சீக்கிரம் அதிகார பதவிக்கு வருவோமென்று நம்பிக்கையுடன் தாங்கள் சுய நலத்திற்காக முன்னோர்தேசத்தைக் காட்டிக் கொடுக்கத் தயங்காதவர்களாயும் தற்பொழுது கூட அவ்வாறு தேசத்தைக் காட்டிக்கொடுக்க தயங்காதவர்களாயுமுள்ள நபர்கள் பலர் உங்களை சுற்றிச் சூழ்ந்துகொள்ள ஆரம்பித்தார்கள். உன்னத லக்ஷியங்களைக் கொண்டிருப்பதாக சொல்லிக்கொண்டிருந்த காங்கிரஸ்தன்னை உலகின் மற்றெந்தஸ்தாபனத்தையும்விடச்சிறந்ததெனச் சொல்லிக்கொள்ள முடியாத ஸ்திதிக்கு இறங்கி வந்து விட்டது. மாகாண காங்கிரஸ் கமிட்டிகள் அதிகார ஆசைக்கும் சூழ்ச்சிகளுக்கும் உறைவிடமாக இருக்கின்றன. இந்த நோக்கஙகளில் சித்தி பெருவதற்காக கண்ணிய மற்றமுறைகள் கையாளப் படுகின்றன. காந்தி இர்வின் ஒப்பந்தத்தை எதிர்க்கின்றவர்களாயும் அதனை பகிரங்கமாகச் சொல்லதைர்ய மற்றவர்களாயுமிருக்கின்றவர்கள் நீங்கள் இங்கிலாந்திலிருந்து திரும்பியதும் போராட்டத்தைத் துவக்குவதைத் தவிர்க்க முடியாதபடி ரகசியமாக வேலை செய்து விட்டார்கள்.

நீங்களே இந்தப் பொறியில் அகப்பட்டுக்கொண்டு அற்ப காரணத்தை சாக்காக வைத்து போராட்டத்தைத் திரும்பத் துவக்கும்படி தேசத்தாருக்கு யுக்தி கூறினீர்கள். காங்கிரஸ்காரர்களது யோசனை சக்தியும் மனச்சாட்சியும் கார்யக்கமிட்டிக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டன. உண்மையில் தாங்களே கார்யக்கமிட்டியாக இருந்தீர்கள். என்னைப்போல் தங்களிடம் (காந்திஜியிடம்) நம்பிக்கை கொண்டவர்களாயும் ஆனால் மீண்டும் போராட்டத்தைத் துவக்குவது துர்அதிர்ஷ்டவசமான கார்யமாக இருக்குமென்று அபிப்பிராய கொண்டவர்களாயும் ஆனால் தங்களிடமுள்ள விசுவாசத்தின் காரணமாகத் தங்களது மேற்கண்ட அபிப்பிராயத்தை விலைவிட்டுச் சொல்லாதவர்களாயுமுள்ள பலர் இருந்தார்கள். என் போன்றமனோபாவமுடைய பலரும் நிபந்தனை மேல் சிறையிலிருந்து வெளிவர மறுத்தனர். சர்க்கார் முறைக்கும் எதிர்ப்பிருந்தபோதிலும் காந்தி இர்வின் போராட்ட நிறுத்த உடன் பாட்டிற்குப் பிறகு, முக்கியமான ராஜ்யக் கோரிக்கைகள் சம்பந்தமாகக் காங்கிரஸ் காரர்களுக்கும் மிதவாதிகளுக்கும் அதிக வித்தியாசமில்லை என்று நான் நம்புகின்றேன். புதிய போராட்டம் ஆரம்பமானதும் தங்களை (காந்திஜி) சூழ்ந்துகொண்டிருந்த சுயநலமுள்ளவர்கள் தங்களை விட்டு ஓடிவிட்டார்கள். அவர்கள் தேசத்தின் கஷ்டத்தைத் தங்களுக்குப் பணம் சம்பாதித்துக்கொள்ளும் சாதனமாகப் பயன் படுத்திக் கொண்டார்கள். தற்பொழுது நடக்கும் போராட்டம் ஊக்கத்தை உண்டாக்கத் தவறிவிட்டது.

இது உண்மையான போராட்டமாய் இல்லை அது தற்பொழுது அடைந்திருக்கும் ஸ்திதியைப் பார்த்தால் விவேகிகள் கூட சத்தியாக்ரஹமென்ற பெயரால் நடக்கும் இந்த இயக்கத்தில் நீதியையும் சத்தியத்தையும் கண்டுபிடிக்கக்கஷ்டப்படுகின்றனர். அற்ப விஷயங்களுக்கெல்லாம், ஜனங்களுக்குள் பரபரப்பை உண்டாக்க முயற்சி செய்யப்படுகின்றன. தங்களுடைய உயர்ந்த லக்ஷியங்களை ஏற்கும்படி தூண்டுவதற்காக அல்லாமல் தங்களுடைய சுயநலமுள்ளதாயும் அற்பமானதாயுமுள்ள முறைகளை ஏற்கும்படி நிர்ப்பந்தம் செய்வதற்காக ஜனங்களில் ஒரு பகுதியினரை மற்றொருபகுதியினர்மேல் ஏவி விடுகிறார்கள். தீண்டாமை விலக்கு இயக்க சம்பந்தமாகத் தாங்கள் செய்யும் வேலையைப் பற்றி வியாக்யானங்கள் எனது மனதில் பதியவில்லை. ஏதேனும் ஒரு வழியில் ஒத்துழைப்பது அவசியமென்று தாங்கள் கருதினால் சிறையிலுள்ளவர்களது உயிரை வதைக்காமல் யோக்கியமான முறையில் சட்டமறுப்பு இயக்கத்தைத் தாங்கள் சட்டமறுப்பு பலிக்கவில்லை என்று தாங்கள் கருதினால் அதை ஒத்துக் கொள்ளப் பெரியாராகிய தங்களுக்கும்போதிய பலமும் தைர்யமும் இருக்க வேண்டுமென ஒருவர்எதிர்ப்பார்ப்பது இயற்கையே யாகும்.

---

## மோட்டார் வரி.

### சர்க்கார் அறிக்கை.

சென்னை மோட்டார் சைக்கில்வரி விகிதங்களை சர்க்கார் அடியில் கண்டபடி மாற்றியிருப்பதாகவும், புதியவரி விகிதங்கள் 1-1-33 லிருந்து அமுலுக்கு வருமென்றும் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்

| 3 மாதத்துக்கு | நியூமாடிக் டயர் | மற்ற டயர்கள் |
|---|---|---|
| 3½ குதிரை பவருள்ள மோட்டார் சைகில், சைட்காரில்லாமல் | 7-8-0 | 10-0-0 |
| ஷை சைட்காருடன் | 10-0-0 | 12-8-0 |
| டிறை சைகிள்கள் | 10-0-0 | 12-8-0 |

(7ம் பக்கத்தொடர்ச்சி)

விட்டது. இவற்றால்வாழ்வில் மனிதனுக்கு எவ்வித சௌகரியமோ உயர்வோ ஏற்பட்டதாகசொல்வதற்கில்லை. இதுமாத்திரமல்லாமல் மனித சமூக நன்மைக்காக, நல்ல வாழ்வுக்காக, முன்னேற்றத்திற்காக என்று எவ்வளவோ மதங்களும் அரசாட்சிகளும் சீர்திருத்தங்களும்தோன்றின அவைகளும் இன்றைய வரை எந்த ஆட்சியிலோ, எந்த மதத்திலோ, எந்த சீர்திருத்தத்திலோ ஏதாவது ஒரு காரியம் சாதித்ததாக காணப்படவேயில்லை.

மக்களுக்கு சுகதுக்கம் பொது என்றும் ஒருவன் சுகப்படுவதும் ஒருவன் கஷ்டப்படுவதும் இயற்கை என்றும் இவையெல்லாம் கடவுள் செயலென்றும், மாற்றமுடியாதவை என்றும் சொல்லப்பட்டு அந்தப்படியே மக்களையும் நம்பச்செய்து சிலர் கஷ்டப்படவும் சிலர்சுகப்படவுமான முறைகள் நிலைநிறுத்தப் பட்டனவே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.

இன்றைய தினம் இருந்து வரும் எந்த அரசியலை, எந்த மத இயலை, எந்த செல்வ இயலைக்கொண்டும் மேல்சண்ட அக்கிரமங்களை ஒழித்து விடக்கூடும் என்றோ மக்கள் யாவரையும் சமமாக ஆக்கிவிடக்கூடும் என்றோ நினைப்பது முட்டாள் தனமேயாகும். ஆதலால் ஏதாவதொரு புதிய முறையைக்கைக்கொண்டுதான் ஆகவேண்டும். அதைப்பற்றி பிறத்தியார் என்ன சொல்லுவார்கள் என்கின்ற கவலையை சிறிதும் வைக்கக்கூடாது. அது கிளர்ச்சி என்று சொல்லப்பட்டாலும், புரட்சி என்று சொல்லப்பட்டாலும் நாம் பயப்பட வேண்டியதில்லை. கிளர்ச்சியும், புரட்சியும், உலக இயற்கை மனித இயற்கை, நடப்பு இயற்கை. கிளர்ச்சியிலும், புரட்சியிலும் பிரிக்க முடியாமல் கலந்து இருக்கிறான் என்பதை ஒவ்வொரு மனிதனின் நடப்பையும், உணர்ச்சியையும் கவனித்துப்பார்த்தால் விளங்கிவிடும் நாம் எவ்வித சுயநலத்தையோ பலாத்காரத்தையோ குறிவைத்து இப்படிப் பேச வில்லை. ஆனால் மக்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து சகிக்க முடியாமல் பரிதாபத்தாலேயே தான் இப்படிப் பேசுகிறோம். என்பதாக பேசினார். பிறகு தலைவர் தோழர் மதுரை டி. நாராயணன் பி. ஏ., பி. எல்., அவர்கள் தோழர் ராமசாமி பேசியதை ஆதரித்துமுடிவுரை கூறினார். பிறகு கௌன்சிலர் தோழர் திருவண்ணாமலை அவர்கள் நன்றி கூறி கூட்டம் முடிவடைந்தது.

மறுநாள் காலையில் தோழர் வல்லத்தரசு அவர்கள் திருவனந்தபுரத்துக்கும், தோழர்கள் நாகை மணியும், ஈ. வெ. ராமசாமியும் ஈரோட்டிற்கும் பிரயாணமானார்கள். வழியில் திருச்சியில் இறங்கி மாகாண மகாநாடு விஷயமாய் சில தோழர்களிடமும் பேசியபின் ஆதிதிராவிட தீண்டாதவர்கள் என்கின்ற தோழர்கள் சுமார் 40, 50 பெயர்கள்வரை வந்து தாங்கள் கிறிஸ்துவ மதத்திலும் தீண்டாதாராய் பாவிக்கப்படும் கொடுமையைப்பற்றியும் அதற்காக சில திட்டங்களைப்பற்றியும் பேசப்பட்டது பின் இரவு ஈரோட்டிற்கு புறப்பட்டார்கள்.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

ளின் மதப்பிரசாரங்கள் சமதர்மத்திட்டத்தால் மக்களடையப்போகும் பலன், வாலிபர்கள் கடமை என்ன? வரும்கால பொதுவுடமை உலகம் வாலிபருடையது. என்பவைகளைப் பற்றி மிகவிரிவாகவும், விளக்கமாகவும் மகாநாட்டுப்பிரதிநிதிகட்கு உணர்ச்சி ததும்பப்பேசினார்கள்.

தலைவர் அவர்கள் முடிவுரை கூறியமர்ந்தார். அதன் பின்னர் தோழர் வி. பி. எஸ். மணியர் அவர்கள் யாவருக்கும் வந்தனோபசாரங்கூறினார். இத்துடன்மகாநாடு இரவு 7-30மணிக்கு இனிது முடிவடைந்தது.

# குட்டரோகமும், சித்தமுறையும்.

[யாழ்ப்பாணம்—செல்லையா]

(முன் தொடர்ச்சி)

உலகில் அநேக பாஷைகளிருந்தும் எல்லாப் பாஷைகளும் மனிதர்களாலேயே உண்டாக்கப் பட்டனவல்லவா? கிரந்த பாஷையைமாத்திரம் ஒரு தனிக் கடவுளால் பார்ப்பனர்க் கென்றே சிறப்பாகச் செய்யப் பட்டதாக சில நூல்களிற் கூறப்பட்டிருக்கிறன. அப்பாஷையில் எல்லாபாஷையிலும் முள்ள சிற்சில வெழுத்துக்கள் காணப்படுகின்றன. இதனுல் இக்கிரந்த பாஷை பல பாஷையிலிருந்து பொறுக்கிச் சேர்க்கப்பட்டதென்பதுதான் சிறந்த அறிவாளிகளின் முடிபு. அப்பாஷையை பார்ப்பனர்களை தவிர வேறு எச் சாதியாராவது படிக்கவோ, கேட்கவோ சுதந்தரம் சிறிது மில்லை. அக்காலத்தில் தமிழர்கள் அப்பாஷையைக் கற்றுக்கொளளவோ, கேட்கவோ அவாக் கொண்டால் அவர்களுக்கு மிகக் கொடுமையான தண்டனைகளுண்டு தற்காலத்தில் காருண்ய அரசாங்கத்தாரின் உதவியால் கிரந்தபாஷையை எவ் வகுப்பினரும் கற்றுக் கொள்ளும் சுதந்தரத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களின் நய வஞ்சகத் திருட்டுத் தனத்தையும். மோசடியையும், அப்பாஷையினுல் எழுதிவைத்திருக்கும் ஆபாசத்தையும் தமிழர்களோ அல்லது மற்றவர்களோ தெரிந்து கொள்வார்க ளென்றன்றோ அப்பாஷையைத் தாங்களும் தங்களுடைய இனத்தாருமேயன்றி மற்றவர்கள் படிக்கவும், காதால் கேட்கவும் கூட சுதந்தரம் சிறிதும் கிடையாதென்று நூல்களிலெழுதியும் நேரே சொல்லியும் பாமர மக்களை ஏமாற்றி வயிறு புடைக்கவுண்டு களித்து வந்தார்கள். இன்னும் அப்படியே செய்தும் வருகிறார்கள். இக்காலத்திலும் சில ஆஸ்திகர்கள் "பாணினிக்கு கிரந்தத்தை அருளிச் செய்த வாயால் அகத்தியனுக்கும் தமிழை அருளிச் செய்தார் எம்பெருமா"னென்று வாயில் வந்தபடி யெல்லாம் பிதற்றுகிறார்கள். இவர்களின் அறிவின் நுட்பத்தை எதற்கு ஒப்பிடலாமென்று வாசகர்கள் கவனிப்பார்களாக. இது நிற்க,

ஆயுள் வேத வைத்தியர்களிற் சிலர் செய்யும் தந்திரங்கள் பலவுண்டு. அத்தந்திரங்கள் நோயாளிகளையும் அவர் சுற்றத்தாரையும் பல துறைகளிலும் துன்பப்படுத்தும் தந்திரமே யொழிய அவர்களைச் சுகமாக்கும் தந்திரமல்ல. இதற்குப் பாகுபாடும் பல. ஒரு நோயாளிக்கு சிகிச்சை செய்யப்போவதற்கு முன் வைத்தியர்கள் சகுனம் பார்ப்பதும், நாள் பார்ப்பதும், அவரை அழைக்க எத்தனை பேர்கள் வந்தார்களென்றும் பார்ப்பதுதான் இவர்களுடைய முக்கியமான வேலை நோயாளிகளுக்கு மருந்துகள் கொடுப்பதைப்பற்றிய கவலைகளே கிடையாது இவர்கள் சகுனம் முதலியவைகளைப் பார்த்துப்புறப்படுவதற்கு முன் நோயாளி இறந்து போவதுமுண்டு. சிலர் நாங்கள் கொடுத்த மருந்தினுல் நோயாளிக்குச் சிறிதும் குணந்தெரியாது போனுல் என்ன செய்வது விதியின் பயனுச்சே, நோய்க்குத்தான் மருந்து கொடுக்க முடியும். விதிக்கு மருந்து கொடுக்க முடியாதென்றும் சொல்லி பாமர மக்களை ஏமாற்றிக்கொண்டே வந்தார்கள். இக்காலத்திலும் அப்படியே செய்தும் வருகிறார்கள். அதுவுமல்லாமல் நோயினுல் வருந்தும் நோயாளிகளுக்கு பல கர்மச் சடங்குகளைச் செய்து நோயாளியின் பணத்தை சாந்தி முதலியவைகளைச் செய்யும்படி சொல்லி வீண் செலவுகள் செய்யவும் ஏவுகின்றார்கள்.

நோயை இன்னதென்று அறியாத ஆயுள்வேத வைத்தியர்களிற் சிலர் முரண்பட்ட மருந்துகளைச் சில நோயாளிகளுக்குக் கொடுத்து உள்ள நோயை அதிகப்படச் செய்வதுமல்லாமல் நோயாளியின் பெற்றோரிடத்திலோ அல்லது சுற்றத்தாரிடத்திலோ அவரின் சாதகத்தைப்பார்த்து கிரகதோசம் எப்படியிருக்கிறதென்றும், எந்தெந்தக் கிரகம் பகையாயும், நீசமாயுமிருக்கிறதென்றும், பார்த்து அதற்காகவேண்டிய சடங்குகளைத் தாமதமின்றிச் செய்தாலன்றி மருந்து நோயைக்கண்டிக்காதென்றும், அச்சடங்குகள் செய்வதினுல் நோயாளி பூரண சுகமடைவானென்றும், பாமர மக்களை எய்த்தும், பயமுறுத்தியும் வீணிலே அவர்களைக்கொண்டு நவக்கிரக பூசையும், சுப்பிரமணியனுக்கு அபிசேகமும், பிள்ளையாருக்குத் தலைபோன்ற மோதகமும், வீரபத்திரருக்கு வடைமாலையும் மாரிக்கும், காளிக்கும் சேவலும், ஆட்டுக்கிடாயும் வெட்டிப் பலியிட்டுப் பூசைகள் செய்து விடும்படியும் கட்டளையிடுகிறதுமல்லாமல், சிவனுடைய ஈசானிய முகத்திலிருந்து தோன்றிய ஆதிச்சைவர்களாகிய பார்ப்பனர்களுக்கும், சிவனுக்கோ விஷ்ணுவுக்கோ தொண்டு செய்து கொண்டு திரியும். (அதாவது அவர்களின் மந்திரத்தையோ பெயரையோ சொல்லிக்கொண்டு திரியும்) சோம்பேறிகளாகிய அடியார்களு (சாதுக்கள்) க்கும் (பரதேசிகள்) அன்னதானம், சொர்னதானங்களைச் செய்து அவர்களை மனத்திருப்தி பண்ணவும் வேண்டுமென்றும், அப்படிச்செய்தால் இந்நோயானது கூடிய சீக்கிரம் சுகமாகுமென்றுஞ் சொல்லிப் பாமர மக்களை எய்த்து அவர்களைக் கொண்டு கோயில் பூசாரிப்பார்ப்பானுக்கும், அபிசேகத்துக்கு தண்ணீர் இறைக்கும் பார்ப்பானுக்கும், மடப் பள்ளிப்பார்ப்பானுக்கும், பூசாரிகளுக்கும், கிழிந்த பஞ்சாங்கத்தை வைத்துக் கொண்டு கை விரல்களால் கணக்கு எண்ணுகிற சோதிடப்பார்ப்பானுக்கும், தங்களுடைய கடவுளர்களின் பெயரைச் சொல்லிக்கொண்டு திரியும் சோம்பேறிச் சிவனடியாருக்கும் ஏழைப் பாமர மக்களின் பணத்தை வீணிலே எய்த்துக்கொள்ளையிட்டுக்கொள்ளுகிறார்கள். இது ஆயுள் வேத வைத்தியரின் சம்பிரதாயம். இவர்களின் சொற்படி நோயாளியின பெற்றோர்கள் துன்பப்படும் நோயாளிக்குச் சிகிச்சை செய்வதைக் கவனியாது நயவஞ்சக வைத்தியர்களின் சொற்கேட்டு மேலே குறிப்பிட்ட கர்மங்களைச் செய்து வீணிலே பெருந்தொகையான பணத்தை இழந்து விடுவதுமல்லாமல் நோயாளிக்குச் சரியான சிகிச்சையில்லாததினுல் நோயாளிகள் இறந்து போவதை யாவரும் அறிந்த விசயமாகும்.

வைத்தியருக்கு நோய் இன்னதென்று தெரியாவிட்டாலும் தன்னுடைய மருந்தில் குணமில்லாது நோயைக் கண்டிக்காவிட்டாலும், நோயாளிக்கு விதி, வினை, முற்பிறப்பிற் செய்த பூர்வ கர்மம் வந்து விடுகின்றது. எந்த நோயாளியாவது வஞ்சகக் கொள்ளைக்கூட்டத்தாரால் எழுதிவைத்திருக்கும் கர்ம விதிகளில் கூறியுள்ளவைகளின்படி சாந்திகளைச்செய்து சுகமானவர்கள் யாருமில்லையே. சில நோயினுல் பிடிக்கப் பட்ட சிலர் அவர்கள் சாப்பிடும் உணவுப்பொருள்களாலும், சிற்சில முயற்சிகளாலும் நோய்களைச் சுகமாக்கிக் கொள்ளுகிறார்கள். சுகப்பட்ட இவர்கள் கர்மச்சடங்குகளாகிய சாந்திகளைச்செய்து சுகமடைந்து விட்டார்களென்றால் எப்படி நம்பத்தக்கது. பெரும்பாலும் கர்மச்சாந்திகள் செய்த நோயாளிகள் மரித்துப்போவதும், சரியான வைத்தியரிடம் சென்று நோய்க்குத் தகுந்த மருந்துகளை வாங்கிச் சாப்பிட்ட நோயாளிகள் நோயின் உபத்திரவமில்லாமல் சுகமடைந்ததையும் பல இடங்களிலும் கண்டிருப்பீர்கள். விதி வினை முற்பிறப்பிற் செய்த கர்மத்தினுல் நோய் ஒருவரைப் பிடிக்குமானுல் ஆயுள் வேத வைத்தியர்கள் அதற்காக வேண்டிய சாந்தி சடங்குகளை செய்யாது நோயாளிக்கு மருந்துகளைக் கொண்டு சிகிச்சைகள் செய்வது என்ன அறியாமை. நோய்க்கு வைத்தியச் சிகிச்சைகள் செய்யும் ஆரியக் கூத்தாடும் ஆயுள்வேத வைத்தியர்கள் என்னென்ன கர்மத்தினுல் மனிதர்களுக்கு நோய்கள் உண்டாகிறதென்றும் முற்பிறப்பில் என்னென்ன கர்மவினைகளை ஒவ்வொரு மனிதர்களும் செய்திருக்கிறார்களென்றும், கடவுள் அருளைப்பெற்ற நீங்கள் ஏன் இன்னும் இவ்வளவு காலமும் அதற்காகவேண்டிய வழிகளைக் கண்டு பிடிக்காததைப்பற்றியும் அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்காததைப்பற்றியும், மிகவும் வருந்துகிறேன்.

மேல்நாடுகளிலுள்ள ஒவ்வொரு வைத்தியரும் இறந்த மனிதர்களுக்கு எப்படியாவது உயிர்கொடுக்க வேண்டும் என்றும், அதற்காகவேண்டிய முயற்சிகள் என்ன செய்யவேண்டுமென்றும், அதற்கு வேண்டிய மருந்துகளைக் கண்டுபிடிக்க வேண்டிய முயற்சிகள் எடுக்கும் இக்காலத்தில், விதி வினைப்பயனென்றால் யார் நம்ப முடியும். ஆரியப் புரட்டுகொள்கைகளைக் கொண்டு மத்தளம் அடித்த காலம் மலையேறி விட்டது. இவர்களால் சுகமாக்க முடியாத நோய்களாகிய குஷ்டம், குறைநோய், மச்சதாதுவில் சேர்ந்த கொடிய மேகங்கள் இன்னும் சிற்சில நாட்பட்ட நோய்களுக்கும் விதியும், வினையும் பூர்வகர்மமாகவும் வந்து விடுகிறது. ஆயுள்வேத வைத்தியர் எவரைக்கேட்டாலும் கர்ம நோய்களுக்கு மருந்து கிடையாது. மருந்து கொடுத்தாலும் சுகமாகமாட்டாது என்றும், செய்யப்போகும் சித்த வைத்தியர்களைப் பார்த்து கேலியும் பண்ணுகிறார்கள். கர்ம நோய்களுக்கு மருந்து கொடுத்து சிகிச்சை செய்து சுகமாக்க முடியுமானுல் அவரைத்தான் ஈஸ்வரன் என்போம் என்கிறார்கள். இப்படியே சொல்லி மக்களை வீணே ஏமாற்றி வயிறுபுடைக்கவுண்டு தொந்தி சரிய திரிந்துகொண்டேயிருக்கிறார். இவர்களிற் சிலர் கர்மநோய்களை ஈஸ்வரனுலும் சுகமாக்க முடியாதென்றும, குஷ்டம், குறைநோய்கள் பிடிக்கப்பட்டவர் கர்மத்தீடாக அநுபவித்துத்தான் தீரவேண்டுமென்றும் கூறுகிறார்கள். அவர்கள் சொல்லுவது சரிதான். ஆயுள் வேத வைத்தியர்களால் இக்கொடிய நோய்களை சுகமாக்க முடியாது என்பது தான் சித்த வைத்தியர்களின் துணிபு ஏனெனில் ஆரியர்கள் வருத்தப்பட்டு ஏதாமொரு பொருளையோ, மருந்து முறைகளையோ கண்டு பிடிக்கப் போதிய மனவுறுதி அவர்களிடத்திலில்லை. யாராவது வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் எதாவது ஒரு புதுப்பொருளைக்கண்டு பிடித்தால், கண்டு பிடித்தவர்களை வஞ்சக சூழ்ச்சிகள் செய்து தொலைத்துப் போட்டு தங்களுடைய பெயரை அப்பொருளின் மேல் எழுதுவதில் மகா சாமர்த்தியர்கள். இதுவரையும் அப்படி செய்து கொண்டே வந்திரு

## ஒரே கேள்வி.

ஏழை-பணக்காரன், மேல் ஜாதி-கீழ் ஜாதி என்ற
வித்தியாசம் ஒழியவேண்டுமா? வேண்டாமா?
ஒழிய வேண்டுமானால் அது காந்தியத்தால் ஒழியுமா?

## ஒரே கேள்வி.

பணக்காரன் கொடுமை ஒழியவேண்டுமா? வேண்டாமா?
ஒழியவேண்டுமானால் அது
காந்திக் கொள்கையால் ஒழியுமா?

## சிவகங்கை, தோழர்

# எஸ். இராமச்சந்திரன்,

## அவர்கள் மரணத்தின் இரங்கற்பாக்கள்.

(முத்துராமலிங்கபுரம் சுயமரியாதைப்பாவலர்
அழகிய நல்லூர் தி. அ. வேங்கடசாமி)

ஆறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்கள்.

சிவகங்கை இராமச்சந்திர நீயும் செத்தாயோ செத்திட்டாயோ!
எவரிந்த நாட்டினிலே ஏழையர்க்குத் தொண்டாற்றிடுவா ரினிமேலையா!
கனகங்கொள் மார்தட்டித் தாழ்த்தப்பட்டவர்க்குறுதி கருதிக்காத்தாய்
நகசங்க மெனமுழங்கிச்சமத்துவப்போர் தொடக்கினாய்நடத்திட்டாயோ (1)

சாதிமதப் பற்றமிக்க மறவர்மா பிணிவதித்தும் சாதி என்ப(து)
எதுயர்வுதாழ்வெது தீண்டாமை எதிவையெல் லாம்பொய்க்கட்டே
நீதிசற்றும் நினையாதார் நிறுவியதந் திரக்கபட நெறியாம்இத்தை
ஜாதிஒழிப் பேனென்ன உரைத்தெழுந்தஉரவோனே ஒழிந்திட்டாயோ. (2)

தீண்டாமை நோய்க்குச்சஞ் சீவியே சாதிமதத்திமிரங்கட்குத்
தூண்டாத விண்மணியாம் சோதியே வைதீக நூலங்கட்குப்
பூண்டவன்ற கோடரியே முதலாளி ரக்கமாம் புல்லாய்கட்கு
தீண்டரிப் பலியேசின் ராமச்சந்த்ரா நீ மாண்டாயே. (3)

மக்களுக்குச்செயுந்தொண்டே மாண்கடவுள் தொண்டெனநீ மதித்துநாளும்
கொக்கரித்துச் சாதிமதப் பித்தர்கள்பால் போர்முழக்கங்கொண்டு நம்போல்
மக்களாய்ப் பிறந்து(ம்)மலத் திலுங்கீழாய் மதிக்கப்பட்டவர்பால் மிக்க
மெய்க்கருணை மழைபொழிந்தாய் ராமச்சந்திரமுகிலே வீந்திட்டாயோ. (4)

அநியாயம் தனையழித் துநியாயமதை நிறுவுவனென்றுரைப்பரித்தே
அநியாயக் காரருடன் போர்தொடங்கி ஏழையரை அஞ்சலென்றே
அநியாயம் சிதைக்கப் பணிபுரிந்த ராமச்சந் திரவள்ளால் நீ
அநியாய மாயொளிந்தாய் என் செய்வோம் அந்தோ, அந்தோ (5)

இந்துமத வெந்தீயால் எரிந்துமிகக் கருகியவெ ளையராம் பைங்கூழ்
வெந்தொழியா வண்ணமருள் மாரிபெய்தே தளிர்ப்பித்தாய் மேலே ஓங்கிப்
பைந்தழைகொண் டலர்ந்தாய்த் தாக்கனிந்து பலன்தருதல் பார்க்குங்காலம்
வந்ததினி எனமகிழ்ந்து நெடுந்தூக்கமுற் றனையோ வள்ளால் மண்மேல். (6)

ஐயகோ உன்னைப்போல் ஆதிதிராவிடர்க்குத்தொண் டாற்றுவார்யார்
ஐயகோ உன்னைப்போல் அகப்புறம் ஒன்றும்செயலர் ஆரேஐயா!
ஐயகோ உன்னைப்போல் அனைவருக்கும் சமநிலைமை அளிப்பார்யாரே
ஐயகோ வெண்ணெய்திரள் போழ்துமிடா வுடைத்ததென ஆயினையே. (7)

நின்மரணம் கேட்டெளியர் நெஞ்சகம்என் படுங்கொல்லோ நிலைஎன்கொல்லோ!
நின்மரணம் கேட்(டு) ஈ. வி. ராமன்மனம் மொழிமெய்படும் நிலைஎன்கொல்லோ!
நின்மரணம் கேட்டசவுந் தரமாறன் முதலோர் தம்நிலைமை என்னே!
நின்மரணம் கேட்டஅன்றே நிலைகலங்கி வீழாரோ நீதரெல்லாம். (8)

தாழ்த்தப்பட் டவர்கோயில் பிரவேசம் தனக்குமார் தட்டி நின்றாய்
தாழ்த்தப்பட் டவர்தமக்கு சமவுரிமை தரச்சமரம் தொடுத்தாய் நோயால்
வீழ்த்தப்பட் டாயெனஅச் சமூகமெலாம் நினையிழந்த விதனத்தாலே
ஆழ்த்தப்பட் டிடுமேஎன் றஞ்சுகின்றோம் அவர்நிலைஎன் ஆம்என் ஆமே. (9)

ஆதிதிரா விடர்கோயில் பிரவேசத்தினுக்காயா சாரியார்பால்
வாதமிட்டு நீர்முற்றும் யாம்வருதும் அல(து)எம்பின் வாரும் என்றே
நீதிமுழக் கம்புரிந்த நினையிழக்க நேர்ந்ததே நேர்ந்ததேஆ!
சோதிமணி ராமச்சந்திரமணியே இருள் உலகைச் சூழ்ந்திடாதோ. (10)

ஒடுக்கப்பட்டவர்க்குத்தொண்டு ஆற்றுவார்க்கெலாம்தலைவ ஒகோமண்மேல்
படுக்கப்பட் டாயினிமேல் யார்எமக்குன் போல்தலைவர் பலிப்பார் ஐயா!
இடுக்கப்பட் டாய்சாதி மதஅகந்தை ஊமலிகளால் இறந்திட்டாயோ
நடுக்குற்ற வஞ்சர்சற்று நடுக்கற்று நிற்பரெனில் ஞாயம் என்னே! (11)

சாதிமத அகங்கார நாய்கள் செல்வப் பேய்கள் வைதீ கச்சர்ப்பங்கள்
ஓதும்அதி காரக்கங் கங்களென துண்மைநிலைக் கஞ்சியுன்னை
மோதியே வீழ்த்திருசித் திடுமோஎன் றையுற்று முந்தவந்து
பாதகநோய் பற்றிமுடித் ததுவோரா மச்சந்த்ரா பாழ்பட்டாயே. (12)

ஏழையர்தம் திருத்தொண்டாம் இராமச்சந்திரனை முடித்திட்டநோயே
பாழுலகில் பாதகர்கள் பலபேர்கள் உளர் அவரைப்பற்றுறாதோ?
தாழ்வுறுதீண்டாமைவெந்நோய்ச் சஞ்சீவி இனிஇருந்தால் சற்றுமின்றிப்
பாழ்படும்அந் நோயெனவே இனம்பற்றிப்பரிந்தனையோ பாவீ! பாவீ!! (13)

பொன் இழந்தால் பெற்றிடலாம் புவியிழக்கினும் பெறலாம் புகழும் தேசம்
முன்னிழந்தால் பின்பெறலாம் முறையிழக்கில் பிறருறலாம் உனைப்போலுண்மைத்
தன்மைஅருள் வீரம்தி யாகம்ஒருங் கேயமைந்த தலைவர்தம்மை
இந்நிலத்தி விழந்துபெற வகையுண்டோ இராமச்சந் திரசொல்லாயோ. (14)

நின்மரணத் தால்நினது குடும்பத்திற் கேற்பட்ட நிட்டூரத்திற்
பன்மடங்காய் மற்றையர்க்கும் பலித்ததந்தோ! நின்போலுந் தமருமாரன்
தன்னை அன்னைத் தமிழ்பயந்தால் அலதுசல னம்தவிர்தல் சற்றுமுண்டோ
மன்ன! இராமச்சந்த்ர மதிபதியே!! மறுமுறையும் வருவாய்கொல்லோ (15)

புத்தர்இரா மானுசர்இ ராமகிருட் டினர்புனித விவேகானந்தர்
எத்தனையோ உத்தமர்கள் இயற்றியும்முற் றுப்பெறா எளியோர்சேவை
சுத்தமுறும் நின்அரிய சேவையினால் முடியுமெனத்து ணிவுகொண்டே
மெத்தனமாய் வாழ்ந்தோம்ரா மச்சந்த்ரா நீயும்கை விரித்திட்டாயே. (16)

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து மூன்றாமப்ர வரியாம் மாதம்
மேயஇரு பத்தாறு(க்கு) ஆங்கிரச மாசிபதி னொந்தில்வெய்ய
ஞாயிறவி னில்எளியர் தவித்து புத்திரனும் ராமச் சந்த்ரன்
தீயபுலா லுடல்நீத்துத் தூயபுகழ் உடம்பெடுத்தான் செகத்தின்மாதோ. (17)

---

க்கிறார்கள். இன்னும் இடம் கிடைத்தால் செய்யவும் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது பல பேருக்கும் தெரிந்தேயாகும்.

யாரும் ஆயுர் வேத வைத்தியர்களிற் சிலரைமாற்றுக்கனுடைய மருந்து நோயைக் கண்டிக்கவில்லை என்று கேட்டால் [illegible] மாறி மாறி நிதானமில்லாமல் அழிக்கின்றன. நோயோ கடுமையாகத் தோன்றுகின்றது. [illegible] சேமமாடி கிறு கிறு என்று ஈடிக்கின்றது. என்ன உமக்குப் பைத்தியமா வென்று இவர்கள் பாமர மக்களை ஏய்ப்பது வழக்கம். இப்பாமர மக்களும் அவர்கள் சொல்வதை உண்மையென்று நம்பி வேறு தெரிந்த வைத்தியர்களிடம் சென்று மருந்து களை வாங்கி நோயாளிக்குக் கொடுத்துச் சுகமாக்காதபடி வீணிலே மடிந்து போகச் சம்பவிக்கின்றது. மடிந்தவுடன் என்னமோ நான் என் செய்வேன். நானும் நல்ல மருந்து களையே கொடுத்தேன். விதிக்கு மருந்து கொடுக்க முடியுமா வென்று சொல்வது வழக்கம். (தொடரும்)

## மணமகள் தேவை.

27 வயதினையுடைய வரும், 8. வது வகுப்புபாஸ் செய்தவரும், பொன்மலை ஒர்க்ஷாப்பில் எலக்ட்ரிக் பிட்டர் வேலைபார்த்து வருபவரும், மாதம் வரும்படி ரூ 30—0—0 வரக்கூடியவரும், ஆமைரத் தெருவில் சொந்த வீடு உடையவருமான கத்தோலிக்க வாலிப ரொருவருக்கு மணமகள்தேவை.

மணமகள்:— 20. வயதிற்கு மேற்படாதவரும், (குறைந்தது) 6, வது வகுப்பு பாஸ் செய்தவரும், எம் மதத்தைச் சேர்ந்த பெண்ணாயினும் சரி, மணம் சுயமரியாதை முறையில் நடைபெறும். கடிதங்கள் இரகசியமாய் வைக்கப் பெற்று வேண்டுவென செய்யப்படும். பதிலுக்கு ரூ 0—1—3 தபால் தலைகள் வைத்து அனுப்பவேண்டும்.

ச. ம. சி. பரமசிவம்,
காரியதரிசி,
தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கம்
22, பாளையம் பஜார்,
உறையூர், திருச்சி.

# ஒத்துழையாமையைக் கொண்ட காந்தி சட்டசபையை ஏன் கொஞ்சுகிறார்?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தர்மங்களுக்கு பதிலாக நவீன உலகப்போக்கை அனுசரித்து கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் தங்கள் ஐசுவரியத்தை தற்காலத்தில் செலவிட்டுவருகிறார்கள். இந்த வகையில் சிறந்து விளங்குபவர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்களாவர் என்று சொல்லவும் வேண்டுமா? சிதம்பரத்தில் ஏற்பட்டுள்ள சர்வ கலாசாலையானது அவரது நிகரற்ற ஈகைக் குணத்தையும் பரந்த ஞானத்தையும் காட்டுகிறது. இவ்வுதாரணம் செல்வம் படைத்த சீமான்களுக்கெல்லாம் விளங்குமென நம்புகின்றேன்.

சர். ராபர்ட் ஸ்டேன்ஸ்.

என் சொந்த அனுபவத்தில் கண்டதான உலகானுபவம் படைத்தவரும் வியாபாரத்திறமை நிறைந்தவருமான சர். ராபர்ட் ஸ்டேன்ஸ் அவர்களைப்பற்றி எவ்வளவு சொன்னாலும் தகும். சுமார் இருபத்தைந்து வருஷங்களாக கோயமுத்தூர் ஸ்டேன்ஸ் கம்பெனியாரிடம் வியாபாரம் நடத்தி வருகிறேன். அவர்களிடமிருந்து ஒரு முக்கியத்தை நான் உணர்ந்து நடப்பது சாத்தியமாயிருக்கிறது. அதாவது நாணயக் குறைவான வியாபாரம் ஒருக்காலும் பயன்படாதென்பதாகும். ஒரு வியாபாரிக்கு நாணயமே பிரதான லக்ஷணம். மனத்தூய்மையும், தெய்வ பக்தியும் நிறைந்த சர். ராபர்ட் ஸ்டேன்ஸ் அவர்களது வாழ்க்கை முறையை கவனிக்க சந்தர்ப்பம் கிடைத்தது எனது பாக்கியமேயாகும். ஆங்கிலராக இருந்தும் ஐரோப்பிய பிள்ளைகளுக்கு கல்வி வசதி அளிப்பது போலவே இந்திய மாணவர்களுக்கும் கல்வி வசதி தாராளமாய் செய்து வருகிறார். அவர் குடும்பத்தினர்களுள்பட இந்தியாவையே தங்களது இருப்பிடமாகக்கொண்டு இரு தேசத்தினரும் ஒன்று கூடி இருதேச நன்மைக்கும் பொதுவாக வியாபாரத்தை நடத்துவது சாத்தியம் என்பதை நிரூபித்துக்காட்டியிருக்கிறார்கள்.

போதும்.

புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வரும் தருவாயில் இந்திய வியாபாரிகளுடைய நிலைமை என்ன? இப்புதிய உலகத்திலே இந்தியாவிலும் பிற நாடுகளிலும் ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைகளையும் நமது வியாபாரத்தலைவர் ஊன்றி கவனிக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. பழய கிராம வழக்கப்படி பண்டங்களைக் கொடுத்து பண்டங்களை மாற்றும் காலம் போய் அகில தேச அளவில் தற்கால வியாபாரம் நடந்தேற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் பஞ்சு வர்த்தகம், நூல் வர்த்தகம், நெசவுக்காரர்களின் பொருளாதார நிலைமை ஆகிய விஷயங்கள் மிக்க சிக்கலடைந்து பெரிய பெரிய நிபுணர்களுக்கும் அனுபவசாலிகளுக்கும் எளிதில் புலனாகக் கூடிய நிலைமையில் இல்லாமலிருக்கின்றன. இதல்லாமல் இந்தியாவிலும், இதர நாகரீக தேசங்களிலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை கவனிக்கும் போதும் கோடிக்கணக்கான மக்கள் இந்தியாவிலும் பிறநாடுகளிலும் வேலையில்லாமல் திண்டாடுவதை கவனிக்கும்போதும் வியாபாரிகள் ஒன்று கூடி விமோசனம் தேடுவதில் தங்கள் முழுபலத்தையும் கவனத்தையும் செலுத்த வேண்டியது அத்தியாவசியமானது என்பது வெளிப்படை. ஆதலால் மரபு வியாபாரத்தலைவர்கள் தக்க பரிகாரங்கள் தேடவேண்டும். நமது மரபினர்களுக்கு கூடுமான வியாபார உதவியை சங்கத்தின் மூலம் செய்து கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். வியாபாரிகள் வைத்திருக்கும் "மகிமை" என்ற வசூல் முறையானது பெரும் தரும காரியங்களைச் சாதிப்பதற்கு ஒரு சாதனமாகும். அதை எட்டு மகிமையாய் நிச்சயிடாமல் சீர்பெறக் கண்காணித்து தகுதியுள்ள ஏழை மாணாக்கர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுத்து தொழில் வியாபாரம் ஆகிய துறைகளில் உள்ள கல்வி வசதிகளை எளிதில் கிடைக்கும்படி செய்யவேண்டும். காலப்போக்கை அனுசரித்து புதிய புதிய துறைகளிலும், கூட்டுறவு முறைகளிலும் வியாபாரம் செய்யக்கூடிய ஊக்கமும், சக்தியும் வாலிபர்களுக்கேற்படக்கூடிய கல்வி புகட்டப்பட வேண்டும்.

காலம் மிகவேகமாயும் மாறுதலடைந்து கொண்டும் போகிறது. ஜாதிக்கேற்ற தொழில் என்பதோ அல்லது ஒரு தொழிலுக்குள்ள ஜாதி என்ற ஒரு கட்டு சித்தாந்தமோ கிடையாது. ஆகவே காலத்திற்கேற்றவாறு மாற்றிக்கொள்ளுவதே சிறந்த மார்க்கம். அப்போதுதான் இந்தப் போட்டி உலகத்தில் வருங்காலத்தில் நிலைநிற்கவும் சுற்றத்தாருக்கு வர்த்தக முறையில் உதவி செய்ய அனுகூலமிருக்கும். ஒற்றுமை பரஸ்பர உதவி ஏழைகளுக்கு ஊழியம் என்பதே நமது லட்சியமாயிருத்தல் வேண்டும்.

சகோதர சகோதரிகளே! தாங்கள் இதுவரையும் இவ்வளவு அன்புடனும் அமைதியுடனும் என்னுடைய வார்த்தைகளுக்கு செவி சாய்த்ததுபற்றியும் இந்த மகாநாட்டுத் தலைமைக்கு என்னைத் தெரிந்தெடுத்ததுபற்றியும் மறுமுறையும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

## சுயமரியாதை தத்துவ கீதங்கள்.

கடம்பக்குளம் தோழர் நாராயணன் பாடியது. நல்ல தெளிவான பாட்டுகள், பாரதியார் மெட்டுகள். தோழர் ஈ. வெ. ராமசாமி படத்துடன் கூடியது. நல்ல காகிதம், நல்ல அச்சு, எளிய நடை விலை அணா, 0—1—0.

விலாசம்:—
குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

## The Rational Books Publishing Society Ltd.

## பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.
பங்கு 1-க்கு ரூ. 10 விகிதம் கொண்ட 3000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.
பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்.

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூல்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூல்களையும் விஞ்ஞான நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூல்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கைகளையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்க முன்வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிகேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10-ல் ரூ. 2½ விகிதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் தவணைப் பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு:- விபரம் அறிய விரும்புவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. ராகவன்,
காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

## சென்னை லோகல் போர்டு ஆக்டு.

(1930-ம் வருஷம் வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0-5-0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

## அமுத ரத்னாகரம்.

(சிறந்த தாது புஷ்டி லேகியம்)

ஐம்பொறிகளுக்கும் நல்ல வலுவைக் கொடுத்து, உயிருக்கு சிறந்த சக்தியைப்பெருக்கி, ஆயுளை வளர்க்கும். 40 நாள் சாப்பிட்டபின் உடலின் நிறை அதிகப்படா விட்டால் பணம் வாபஸ் தருகிறோம்

40 நாளுக்கு ரூ. 4 20 நாளுக்கு ரூ. 2—4—0.

## இன்பமணி.

க்ஷயம்சகம், தாது நஷ்டம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகளை நீக்கி, பூரண இன்பசுகம், வாலிபத்தன்மை, திட காத்திரம் ஆகியவைகளை அளிப்பதில் இதற்கிணையானவை வேறொன்றும் கிடையாது.

30 மாத்திரை ரூ. 5—0—0.

## ஜீரணதி.

(ஒப்பற்ற மலச்சிக்கல் நிவாரணி)

உண்ட உணவைச் செரிக்கச் செய்து நிலக்கோளாறும் மலத்தைக்கழிக்கும். மலச்சிக்கலினால் உண்டாகும் நோய்கள் எதுவாக இருந்தாலும் தவறாமல் குணமாக்கும். பசியின்மை, நெஞ்செரிவு, புளியேப்பம், வயிற்றுவலி, குன்மம், வாந்தி, அரோசியம், தூக்கமின்மை, அசதி ஆகிய நோய்களையும் கண்டிப்பாய் நீக்கும். விலை ரூ. 2.

சித்தானந்த வைத்தியசாலையில் செய்யப்பட்டது. சகல வியாதிகளுக்கும் உத்தரவாதமும், குணமுமுள்ள மருந்துகளிருக்கிறது. விபரத்திற்கு எழுதுங்கள். மலாய் நாட்டு வாசிகள் அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும். கேட்டலாக் இனாம்.

ஏஜண்ட், அருணகிரி அண் கோ.,

தபால் பெட்டி 222, நெ. 49 லிங்கசெட்டி தெரு, சென்னை.

Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem
## By Dr. Paranjpye M. A., D. Sc.

———)o(———

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvenation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.

Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup. Neatly bound.

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

**Kudi Arasu Book Depot, Erode.**

## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

**டி. சி. சிங்காரம் அண் கோ.,**

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

## மாதர்களுக்கு



இது தான்வேண்டியது.

## கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம்உண்டாகும்மிகக அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அன்னிய நாட்டார் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி S.I.

## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அரிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது.

பிரதி ஒன்றுக்கு விலை அணா. 0—6—0

மானேஜர்

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

**கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்,**

## விற்பனைக்காக நம்மிடம உள்ள

# இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 5. | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் ... | 0—6—0 |
| 6. | பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | 0—6—0 |
| 7. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |
| | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)

விலை ரூ. 1—0—0

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.

### சுயமரியாதை இயக்கத் தலைவர்கள்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, முதலிய எல்லா தலைவர்களது படமும் 6½ x 4¾ சைஸ் படம் 1-க்கு 0—8—0 ஈ. வெ. ரா. 8½ x 6½ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 6—4—0 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் 8½ - 6½ சைசில் உள்ள படம் ரூ 1—0—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். விலாசம்:—

பாபு & Co.,
No. 5 தும்பைசகாரத்தெரு,
ஈரோடு

### சுயமரியாதை
### தங்கரத்தினத் தெம்பாங்கு.

இது விருதுநகர் 3வது சு. ம. மகாநாட்டின்போது ஈ. வெ. ரா. முன்னிலையில் படிக்கப்பட்டது. சுயமரியாதைக் கொள்கை முழுதும் தழுவிய அரிய பாடல்கள் வாய்ந்தது.

| | | |
|---|---|---|
| புத்தகம் 1க்கு விலை | ரூ. | 0-1-0 |
| ,, 12க்குத் தபால் செலவுள்பட | ,, | 0-12-0 |
| ,, 100க்கு ,, ,, | ,, | 5-4-0 |

தனிப்பிரதி வேண்டுவோர் 0-1-6 அணா ஸ்டாம்பு அனுப்புதல்வேண்டும்.

M. R. மத்தரன், கலவாரபட்டி..
காசிபாளையம் போஸ்டு,
[திண்டுக்கல் வழி]

**"புரட்சி ஓங்குக!
பொதுவுடமை
தோணுக!!"**

## ஏஜண்டுகள் தேவை

சென்னை மாகாணத்தில் சிறந்த தேசிய "வெடிகுண்டு" என்னும் தமிழ் வாரப்பத்திரிக்கைக்கு இன்றே நான்கு வாரத்திய பிரதிகளுக்கு அட்வான்ட்சாக முன்பணம் கட்டி நமது ஏஜண்டாக பதிவுசெய்துகொள்ளுங்கள். ஏஜண்டுகளுக்கு மாத்திரம் பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசாவீதம் கமிஷன் கொடுக்கப்படும். வருட சந்தா ரூ2—0—0 ஆறுமாதத்திற்கு 1—1—0 வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூ3—0—0. தனிப்பிரதி விலை அரையணா. முன்பணம் கட்டாத எந்த ஆர்டர்களையும் அங்கீகரிக்கப்படமாட்டா.

மானேஜர்
"வெடிகுண்டு"
தெற்குவாசல், மதுரை.

## "தமிழன்"

### ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

உங்கள்.

## கண்ணையும்
## காதையும்
### கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**"Sri" Works**
**Beadon St.; Calcutta.**

# பண்டிட் ஆனந்தரின்,

## அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துக்கொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய வெதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ன அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

**மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,**
221, தங்கசாலை வீதி, சென்னை.

# லெனினும், மதமும்.



இது ரஷிய தேசத்தின் மதப்பித்தையும், பாதிரிகள் புரட்டையும் ஒழித்து, கொடுங்கோலரச குடும்பத்தை வேருடன் வீழ்த்தி ஏழை பணக்காரத்தன்மையை அழித்து, தோட்டி முதல் தொண்டமான்வரை எல்லோருடைய வாழ்க்கையையும் ஒரே மாதிரியாக்கி தொழிலாளிகளால் தேசம் முழுவதும் ஆக்ஷி புரியும்படி செய்த ஒப்பற்ற பொது உடமைக்கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இதை வாங்கிப் படிப்பவர்களுக்கு மதத்தைப்பற்றி சுயமரியாதை இயக்கத்தாரின் கொள்கை என்ன என்பதும், அவர்கள் ஏன் தங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதில்லை என்பதும், பின்னை ஏன் அவர்கள் நாஸ்திகப்பிரசாரஞ்செய்பவர்களாகக்காணப்படுகிறார்கள் என்பதும், சுயமரியாதை இயக்கக்காரர்கள் காங்கிரசையும், காந்தீயத்தையும், தேசியத்தையும் ஏன் குற்றம் சொல்லுகிறார்கள் என்பதும், காந்தியின் குருவென்னும் டால்ஸ்டாயை ரஷியர்கள் ஏன் வெறுத்தார்கள் என்பதும் நன்ருய் விளங்கும். மற்றும் தொழிலாளிகளும் சரீரத்தினல் பாடுபட்டு உழைக்கும் மக்களும், பாடுபட்டு அப்பாட்டின் பயன்பெருமல் கஷ்டப்படக் காரணம் என்ன என்பதும், அவர்கள் விடுதலையடைய மார்க்கம் என்ன என்பதும் நன்ருய் விளங்கும். ஆகவே இப்புத்தகத்தை ஒவ்வொரு தொழிலாளியும், ஒவ்வொரு சுயமரியாதைக்காரரும் அவசியம் படிக்கவேண்டியதாகும்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணு 0—4—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கும், சுயமரியாதை சங்க அங்கத்தினர்களுக்கும் விலை அணு 0—3—0

விலையுடன் ஒரு அணு ஸ்டாம்பு சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு புக்போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# "கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "பரம் முக்கியதா, வித்து முக்கியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணு 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணு தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.


உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது,